www.tamilarangam.net


# ஈழத்தில்

தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகி விடும்.

- தியாகி லெப்.கேணல் திலீபன்

திருவள்ளுவர் ஆண்டு 2027 கன்னி 04 (18.09. 1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் அன்பளிப்பு: 60 p


# ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் தமிழர்களை அடிமைகளாக்கும் செயலில் சிறிலங்கா

## விடுதலைப் புலிகளின் சர்வதேச அங்கீகாரம் ஒன்றே தமிழ் மக்களின் அடிமை வாழ்வை அகற்றும்

**யாழ்**. குடாநாட்டில் தமிழீழ மக்களை கொத்தடிமைகள் போல் சிறிலங்கா அரசு நடாத்தத் தொடங்கியுள்ளது. யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்த சிறிலங்கா, சிறிது காலம் சர்வதேச உலகின் கண்களுக்கு, தமிழ் மக்களுக்கு தான் சலுகைகள் செய்வதுபோல் நாடகமாடிவிட்டு, தற்பொழுது அவர்களைத் தனது இனவாத நோக்குடன் பார்க்கத் தொடங்கிவிட்டது.

மக்களின் அடிப்படை உரிமைகளான நடமாடும் சுதந்திரம், மதவழிபாட்டுச் சுதந்திரம், கல்விக்கான உரிமை போன்ற பல மனித உரிமைகள் ஆயுத முனையில் பறிக்கப்பட்டு வருகிறது.

### பள்ளி மாணவி படுகொலை

யாழ். கண்டி வீதியில் பரீட்சைக்காக கல்லூரிக்குச் சென்றுகொண்டிருந்த பள்ளி மாணவிகள் இடையே, சிறிலங்கா இராணுவம் விசமத்தனமான முறையில் தமது இராணுவ வாகனத்தைச் செலுத்தி அவர்களை மோதியுள்ளது. இதில், அரியாலையைச் சேர்ந்த 19 வயதுடைய, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி தயானந்தி கணநாதன் என்பவர் அவ்விடத்திலேயே இறந்துபோயுள்ளார். மக்களின் முன்னிலேயே பட்டப் பகலில் இக்கோரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதேவேளை, தமது ஆக்கிரமிப்புப் பகுதிக்குள்ளேயுள்ள, பரீட்சை நடந்துகொண்டிருக்கும் மண்டபங்களை நோக்கியும் இராணுவம் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளது. இச் சம்பவம் வட்டுக்கோட்டை பண்ணாகம் பகுதிகளில் இடம்பெற்றுள்ளது. வட்டு. இந்துக் கல்லூரி மைதானத்தில் எறிகணை ஒன்று விழுந்து வெடித்ததினால் க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதிக் கொண்டிருந்த மாணவர்கள் பேரதிர்ச்சிக்கு உள்ளாகினர். இப்படியான பல செயல்களால் முழு க.பொ.த பரீட்சார்த்திகளும் குழப்பமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

### மத சுதந்திரம் மறுப்பு

நல்லூர் ஆலய வருடாந்த உற்சவத்திற்கு மக்கள் செல்வது சிறிலங்காப் படைகளினால் வலுக்கட்டாயமாகத் தடுக்கப்பட்டது. நாற்பது வயதுக்கு மேற்பட்ட சுமார் இருநூறு பேரை மட்டுமே இராணுவம் ஆலய பிரதேசத்திற்குள் செல்ல அனுமதித்தது. யாழ். குடாநாட்டு மக்களின் அடிப்படை மனித உரிமைகள் சிறிலங்கா அரசால் எவ்வித அச்சமுமின்றி ஆயுத முனையில் பறிக்கப்பட்டு, அவர்களை நடைப்பிணங்களாக மாற்றும் வேலையைத் தனது

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

# வீரவிலவைத் தொடர்ந்து அநுராதபுரத்தில் அமெரிக்காவின் இராணுவப் பயிற்சி

## கொழும்புத் தமிழ்க் குழுக்களுக்கும் திடீர் முக்கியத்துவம்

இலங்கைத்தீவில் அமெரிக்காவின் நேரடித் தலையீட்டுக்கான சாத்தியக்கூறுகள் மேலும் வலுப்பெற்று வருவதாக இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

வீரவிலவில் சிறிலங்காப் படையினருக்கு, அமெரிக்க 'கிறீன் பெரெட்' அணியினர் நேரடி இராணுவப் பயிற்சி அளித்த பரபரப்பான செய்தி வெளியாகியதைத் தொடர்ந்து, அநுராதபுரத்தில் அதைவிட வலுவான முறையில் சிறிலங்காப் படையினர்க்கு அமெரிக்கா பயிற்சி அளித்தமை அம்பலமாகியுள்ளது. இச் செயற்பாடுகளை இலங்கைத்தீவில் அமெரிக்காவின் அதி உயர்மட்ட செயற்பாடாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இவ்வாறு இராணுவ ரீதியான தலையீட்டினை ஆரம்பித்துள்ள அமெரிக்கா, அரசியல் ரீதியாகவும் தலையிடும் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான முன் முயற்சிகள் கொழும்பில் நடை பெற்று வருவதாகத் தெரிய வருகிறது. கொழும்பிலுள்ள சிறிலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவர், திரு. பேர்லைய் (Burleigh) கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்களை அழைத்து நீண்ட

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

# அகிம்சையின் தலைவன் தியாகி திலீபன் தமிழீழ வரலாற்றில் பிறந்த 9-வது ஆண்டு

**அ**கிம்சை யாராலுமே வெல்லப்பட முடியாத ஒன்று என்பார்கள் – காலத்தாலும் கூட வெல்லப்பட முடியாத ஒன்றுதான் என்பதை உலகுக்கு உணர்த்த தமிழீழ வரலாற்றில் தன்னுயிரை, எமக்காய் அர்ப்பணித்து பிறப்பெடுத்த தியாகி லெப். கேணல் திலீபனின் 9வது நினைவு தினம், தமிழீழமெங்கும் மட்டுமல்ல, எங்கெல்லாம் தமிழ் மக்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் நன்றியுடனும் பெருமையுடனும் உணர்வு பூர்வமாக செப்டெம்பர் 26 திகதி வரை நினைவு கூறுப்படுகிறது.

அகிம்சா மூர்த்தியான காந்தியினைத் தனது தேச பிதாவாக வர்ணிக்கும் இந்தியா, தமிழீழ மக்களுக்கு அநீதி இழைத்த பொழுது அந்த அநீதிக்கு எதிராய் அகிம்சை வழியில் 1987 செப்டெம்பர் 15ஆம் திகதி நீர் கூட அருந்தாத தனது உண்ணாநோன்பினைத் தொடங்கினான் உத்தமவீரன் திலீபன்.



திலீபனால் முன்வைக்கப்பட்ட நீதியான 5 கோரிக்கைகளும் இந்திய அரசால் ஏறெடுத்துக்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

# மக்களை பலவந்தமாய் வெளியேற்ற முயற்சி

- ☆ திருமலை லிங்க நகரில் அரச அதிபர் சதி
- ☆ அளம்பில், பொக்கனையில் இராணுவம் எறிகணை வீச்சு
- ☆ புத்தளத்தில் காரணமின்றிக் கைது

தமிழர்களை, அவர்கள் காலம் காலமாக வாழ்ந்து வந்த பிரதேசங்களில் இருந்து குடியெழுப்பி, சிங்களவர்களைக் குடியேற்ற சிறிலங்கா அரசு, தனது ஆயுதப் படைகள் மூலம் பயமுறுத்தல்களையும் பலவிதமான நிர்ப்பந்தங்களையும் ஏற்படுத்தி வருகிறது.

திருமலை நகரத்துக்கு அண்மையிலுள்ள பிரபலமான தமிழர்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இளம்பிள்ளை வாத தடுப்புத் திட்டத்திற்காக 4 நாட்கள் அமைதி காப்பு

-தேசியத் தலைவர் யுனிசெவ்விற்குப் பதில்

இளம்பிள்ளைவாத நோய்த் தடுப்பு வைத்திய நடவடிக்கைக்கு வசதியாக, குறிப்பிட்ட சில நாட்களுக்கு அமைதி காக்கும்படி, 'யுனிசெவ்' விடுத்த வேண்டு கோளை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. இதன்படி, யுனிசெவ்வின் சேவைக்கு முழு ஒத்துழைப்பு விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கடந்த செப்டெம்பர் 6ஆம் 7ஆம் திகதிகளில் விடுதலைப் புலிகளால் பூரண அமைதி காக்கப்பட்டது. அடுத்த ஒக்டோபர் 11ஆம் 12ஆம் திகதிகளிலும் இது தொடர்கிறது. இதற்கான உறுதியைத் தெரிவித்து, தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள், யுனிசெவ்வின் கொழும்புப் பிரதிநிதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

தலைவர் தனது கடிதத்தில், குழந்தைகளின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் இச் செயற் திட்டத்திற்கு பூரண ஆதரவு தெரிவித்ததுடன், குறிப்பிட்ட நான்கு நாட்களிலும் விடுதலைப் புலிகள் அமைதி காப்பார்கள் என உத்தரவாதம் அளித்திருந்தார்.

அதேவேளை, யுனிசெவ்வின் வேண்டு கோளுக்கிணங்க குறிப்பிட்ட நாட்களில் அமைதி காப்பதில் சிறிலங்காவும் சாதகமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பதையும் தலைவர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ◆

# தமிழ்த் தேசியத்துக்கு 164 வயது சிங்களப் பேராசிரியர் அறுதியிட்டு உறுதி

தமிழ்த் தேசியம் என்று ஒன்று உண்டா என எம்மவரில் கூட சில அறிவுஜீவிகள் அங்கலாய்ப்பதுண்டு. 'இலங்கைத் தேசியம்' என்று ஒன்று ஒருபோதும் உருவானதில்லை. காலனித்துவ வல்லாண்மைச் சக்திகளே அந்தக் கூட்டுக்கதை கூறி, 'பல்லினச் சமுதாயம்' என்று இலங்கைத் தீவில் உண்டென உலகைக் குழப்பினர். இவ்வாறான தேசியம் உண்டென்பதை நம்பியவர்கள் கூட மூக்கில் விரலை வைக்கும்படியாக, சிங்கள பௌத்த பேரினவாதத்தின் குரல் எனப்படும் பேராசிரியர் நளின் டி சில்வா, தமிழ்த் தேசியத்தை தனியானது தான் என ஏற்றுக் கொண்டுள்ளார்.

"1833ஆம் ஆண்டுமுதல் இந் நாட்டில் தமிழ்த் தேசியவாதம் இருந்து வருகிறது. இந்தத் தமிழ்த் தேசிய வாதத்துக்கு நூற்றி அறுபத்தி நான்கு வயதாகிறது. ஆரம்ப காலம் முதல் தமிழ் இராச்சியமாக இருந்து வந்த வடக்கு–கிழக்கை ஆங்கிலேயர் கைப்பற்றி சிங்களவர்களுக்கு வழங்கிவிட்டதாகவும், அதனை மீண்டும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை பிரபாகரன் உட்பட தமிழ் அரசியல் தலைவர்கள் முன்பிருந்தே கொண்டுள்ளனர். இதற்காகவே பிரபாகரன் ஆயுதம் ஏந்தினார். வெளிநாடுகளும் அதற்கு உதவுகின்றன" என பொரளை இளைஞர் பௌத்த கழக மண்டபத்தில், அரசியல் தீர்வு யோசனையின் போக்கு, இலங்கையின் உள் விவகாரங்களில் வெளிநாட்டுத் தலையீடு, சிங்களவர்களிடம் இருந்து கிழக்குப் பறிபோய் விடுமா? ஆகிய தலைப்புக்களில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன் மூலம் தமிழர் பிரச்சினை சிறுபான்மை - பெரும்பான்மை பிரச்சினையல்ல, உள்நாட்டுப் பிரச்சினையும் அல்ல, தேசிய இனங்கள் இரண்டே இடையான பிரச்சினை. இது பிரிவினைவாதமும் அல்ல. காலனித்துவத்தில் இழந்த உரிமைகளைப் மீளப்பெறும் சுயநிர்ணயப் போராட்டம். தேசத்தை இரண்டாக்கவில்லை. நிபந்தனையின் அடிப்படையில் காலனித்துவ வாதிகள் ஒன்றாக்கிய இரண்டு, நிபந்தனைகள் மீறப்பட்டு, ஜனநாயகம் அழிந்து, பாராளுமன்ற கொடுங் கோன்மையும், ஆயுத ஒடுக்கு முறையும் நிகழ்வானதினால், வாழ்வுக்காக மீளவும் இரண்டாகும் இயல்பான வரலாற்று மாற்றம் என்பதை தன்னை அறியாமலேயே வெளிப்படுத்திய பேராசிரியர் நளின் டி சில்வா, பிரபாகரன் தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கும் தமிழீழ மக்களின் தலைவன் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் பேசிய கோட்டை சிறீநாக விகாரையைச் சேர்ந்த மாதுலவாவே சோபித தேரோ, "சிறிலங்கா அரசு முன்வைத்திருக்கும் தீர்வு யோசனை, காற்றுப் போன 'ரயராகி' விட்டது. அந்தத் 'ரயரில்' எஞ்சியுள்ள காற்றையும் நாம் வெளியேற்றாவிட்டால், எமது பௌத்த இனம் உட்பட இந் நாட்டையே அழிவுக்கு இட்டுச் செல்ல நேரிடும்" என எச்சரித்தார்.

இந்த எச்சரிப்பு மூலம் தமிழரும் சிங்கள வரும் இலங்கைத்தீவில் கூடி வாழ முடியாது என்ற உண்மையை உலகுக்கு உணர்த்தும் தேரோ, இதனால் தமிழர்களுக்கு தங்களது அரசியல் எதிர் காலத்தை தாங்களே நிர்ணயிக்கும் (சுயநிர்ணய உரிமைப் பிரகடனம்) தேவை வந்துவிட்டது என்பதையும் தெளிவாக்கியுள்ளார்.

இதனை, 'இலங்கைத் தேசியம்' எனும் மாயையில் இருக்கும் புத்திஜீவிகள் கவனத்தில் எடுத்து, இனியாவது தலைவர் பிரபாகரனையும், அவரின் வழி நடாத்தலில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளையும், 73ஆம் ஐ.நா வரைவுக் கேற்ப சுதந்திரப் போராட்ட வீரர்களாக அறிவிப்பதே பிரச்சினைக்குத் தீர்வுவர வழி காட்டும். ●

# 20 மைல் நீள மிதிவெடிப் பொறி

யாழ். குடாநாட்டை சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்த பின்னர் மக்களைத் தமது கொடும் பிடிக்குள் வைத்திருப்பதற்காக பல நாசவேலைகளைச் செய்து வருகின்றனர். இவ்வகையில், வடமராட்சிப் பிரதேசமான பருத்தித்துறையில் இருந்து நாவற்குழி வரையிலான 20 மைல் நீளத்திற்கு நிலத்தில் இருந்து 6 அடி உயர அணைக்கட்டுகள் மற்றும் மண் மேடுகள் ஆகியவற்றை உருவாக்கி அதன் மீது பல்லாயிரம் மிதிவெடிகளைப் புதைத்து வைத்துள்ளனர். இதனால் பொதுமக்கள் தமது கால்களை இழக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

தனங்கிளப்புப் பகுதியில் மாட்டு வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த பொதுமக்கள் இராணுவத்தின் மிதிவெடியில் சிக்குண்டனர். இதில் 21 வயதான கிருஸ்ணசாமி உதயகுமார் என்பவர் உட்பட இருவர் பலியாகியுள்ளனர். மற்றவர்கள் காயமுற்றுள்ளனர். இதேபோன்று வலிகாமம் குப்பிளானில் 24 வயதான சுப்பிரமணியம் சிவக்குமார் என்பவர் இராணுவ மிதிவெடியில் கொல்லப்பட்டுள்ளார். இராணுவ ஆக்கிரமிப்புக்குள் இருந்து கிடைக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், இத்தகைய பல சம்பவங்கள் நடைபெறுவதாகவும், ஆனால் செய்திகள் வெளியே வருவதற்குரிய சிக்கல்களால் சில செய்திகள் காலதாமதமாகியே வருகின்றன. சில, அப்படியே மறைந்தும் விடுகின்றன. தளத்தில் இருந்து கிடைக்கும் இன்னொரு தகவலின் படி, வலிகாமம் மற்றும் வடமராட்சியில் வாழும் மக்களை தென்மராட்சிக்குள் செல்வதைத் தடுக்க இராணுவத்தினர், நாவற்குழி மற்றும் வரணிப் பகுதியில் பெருவாரியான மிதிவெடிகளை பாதைகளில் புதைத்துள்ளதாகவும் அறியவருகிறது. மக்கள் வன்னிக்கும் மற்றும் பிற பகுதிகளுக்கும் தப்பி ஓடாமல் இருப்பதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகளில் சிறிலங்கா இராணுவம் இறங்கியுள்ளது. ■

# தெற்கு செல்லவேன சென்ற மக்கள் தாண்டிகுளத்தில் தடுத்து வைப்பு

வன்னிப் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவம் கடுமையான தடைகளை மேற்கொள்வதால் மக்கள் கடுந் துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றனர். வன்னியில் இருந்து, தமது தேவைகளுக்காக தெற்கு செல்லவெனச் சென்ற மக்கள், தாண்டிக்குளம் தடைமுகாமில் சிறிலங்கா இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 60 இளம் பெண்களும், 64 இளைஞர்களும் இவ்வாறு படையினரால் தடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பற்றிய விபரங்களை வெளியிட இராணுவம் மறுத்து வருகிறது. இதனால் இவர்களது நிலை பற்றிய பலத்த சந்தேகம் எழுந்துள்ளது.

## 7 குழந்தைகள் பரிதாபச் சாவு

வன்னி பகுதிக்கு, அரசு மருந்துகள் அனுப்புவதற்கு மறுத்து வருவதினால் 17 குழந்தைகள் ஆடி மாதத்தில் மட்டும் மருத்துவ வசதியின்றி இறந்துள்ளன. புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு போதிய மருத்துவ வசதிகள் இன்மையினால் இடம்பெயர்ந்து வந்த இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்களை சமாளிக்க முடியாமல் திணறுகின்றது.

இது ஒரு புறமிருக்க, வன்னிப் பகுதியே தமிழீழப் பகுதிக்கான கணிசமான நெல்லை உற்பத்தி செய்வதினால் இதனைத் தடுக்கு முகமாக உரங்களை இப் பகுதிக்கு அனுப்ப சிறிலங்கா மறுத்து வருகிறது. உரம் ஏற்றச் சென்ற வாகனங்களை சிறிலங்கா இராணுவம் வெறுமையாகத் திருப்பி அனுப்பியுள்ளது.

# 50 வயதுத் தாய் பாலியல் வன்முறையால் கொலை

திருநெல்வேலி கூட்டுறவு பாற் சங்கத்தில் வேலை செய்யும் 50 வயதுடைய தமிழ்த் தாய் ஒருவரை திருநெல்வேலிப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தின் ஓர் குழு, கூட்டான பாலியல் வன்முறைக்குள்ளாக்கியுள்ளது. காமவெறி கொண்ட அந்த இராணுவக் குண்டர்கள், அத் தாய் மீது மேற்கொண்ட மிருகத் தனமான செயல்களால் அவர் இறந்து போயுள்ளார். இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் இப் பகுதி இருப்பதால் அந்தத் தாயின் பெயர் விபரம் இன்னமும் கிடைக்கப் பெறவில்லை.

# கட்டாய வேலை பெறுதலும் நிதி உதவியும்

யாழ். குடாநாட்டில் இருந்து பெருந்தொகையான மாணவர்கள் வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்த நிலையில் யாழ். பல்கலைக் கழகத்தின் பரீட்சைகளை நடாத்தும்படி சிறிலங்கா பணித்ததினால் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன.

யாழ். பல்கலைக் கழகத்தின் தற்போதைய உபவேந்தராகக் கடமையாற்றும் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை விடுத்த அறிக்கையொன்றில், இடம்பெயர்ந்த மாணவர்களுக்குப் பின்னர் பரீட்சைகள் நடாத்தப்படுமெனக் கூறியுள்ளார்.

ஆனால் மாணவர்கள் மட்டுமல்ல, பல விரிவுரையாளர்களும் நிலைமை சுமூகத்திற்கு வராததினால் பல்கலைக் கழகத்திற்கு திரும்பவில்லையென்பது யதார்த்த உண்மையாகவுள்ளது.

ஆயினும், சிறிலங்கா தனது நிர்வாக அதிகாரிகளைப் பலவந்தப்படுத்தி, யாழ். குடாநாட்டில் வழமையான அரச வேலைகள் நடைபெற்று வருவதாக வெளியுலகிற்கு காட்ட முனைகிறது.

இதன் பின்னணியில் யாழ். குடா நாட்டின் அபிவிருத்தி வேலைகளுக்கென சந்திரிகா அம்மையார், ஐநா அபிவிருத்தித் திட்டத் தூதுக் குழுவிடம் நிதி உதவியும் கேட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் உண்மை நிலை யினை சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதே சிறிலங்கா பற்றிய ஆள்வாளர்களின் கருத்து. ●

www.tamilarangam.net





## இன்னுமேன் உறக்கம் தேச மக்களாயெழுக!

யாழ். குடாநாட்டில் இருபத்தோராம் நூற்றாண்டின் மனித நாகரீகம் சந்திரிகாவின் சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசின் அராஜகச் செயல்களால் தலைகுனிந்து நிற்கிறது.

1974ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை அவசரகால நிலையிலும் ஆயுதப் போராட்டச் சூழலிலும் பெண்கள் சிறுவர்களை பாதுகாப்பதற்கான பிரகடனமொன்றை ஏற்றுக் கொண்டது. ஆனால், சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசு, இந்த ஐ.நா. பிரகடனத்தையோ அல்லது வேறெந்த சர்வதேச சட்டங்களையோ பொருட்படுத்தாது எந்தவித அச்சமுமின்றி வெளிப்படையாக மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்களை தொடர்ச்சியாகச் செய்து வருகின்றது. ஆயினும், சர்வதேச அமைப்புக்களும் நாடுகளும் சிறிலங்காவைத் தொடர்ந்தும் சட்டபூர்வமான அரசாகக் கருதுவதினால் எமது தமிழீழ மக்கள் வெளிப்படையான இனத்துன்புறுத்தலை இனக்கொலையை, இனஅழிப்பை, உட்கட்டுமானங்களின் உருக்குலைவை நாளும் பொழுதும் அனுபவித்து தாங்கொணாத் துன்பப்படுகின்றனர். சர்வதேச அமைப்புக்களை, நாடுகளைப் பார்த்து "இன்னுமா உறக்கம்" எனக் கேட்க வேண்டிய பொறுப்பு, புலம் பெயர்ந்த தமிழீழ மக்களாகிய நம்முடைய கடமையாகியுள்ளது.

நீண்ட கால கொடுமைகளில் கடந்த வாரம் நடைபெற்ற சில சம்பவங்களை மட்டும் எடுத்துப் பாருங்கள். எங்கள் பச்சிளங் குழந்தைகளுக்கு உணவு மறுக்கப்பட்டு – ஊட்டமிழந்து மருந்தும் மறுக்கப்பட்டு – உயிர் இழக்கும் துயரச் சம்பவங்கள் யாழ். வைத்தியசாலைகளில் பதிவாகத் தொடங்கியுள்ளது. எங்கள் பள்ளி மாணவர்கள் பரீட்சை மண்டபத்திற்கு துவிச்சக்கர வண்டியிலே செல்கையில் அவர்களை சிறிலங்கா இராணுவத்தினர் தமது வாகனம் கொண்டு பந்தாடி வேடிக்கை செய்ததினால் உயிரிழப்புக்கள் செய்தியாகியுள்ளது. எங்கள் தமிழ்த்தாய்மார், அவர்கள் தமிழராய்ப் பிறந்த ஒரே காரணத்திற்காக ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களானாலும் கூட பாலியல் வன்முறைக் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படும் செய்தி கேட்கையில் நெஞ்சம் வெடிக்கிறது. எங்கள் உடன்பிறப்புக்கள் – தம்பியாய் இருந்தாலும் சரி அண்ணாவாக இருந்தாலும் சரி தங்கையாக இருந்தாலென்ன அக்காவாக இருந்தாலென்ன – எல்லோருமே அவர்களது தாய் தந்தையரிடமிருந்து ஆயுத முனையில் பிரிக்கப்பட்டு காரணமின்றிக் கைதாக்கப்பட்டுக் கடத்தப்பட்டு, பாலியல் வன்முறைகள், படுமோசமான சித்திரவதைகள் செய்யப்பட்டு உயிரற்ற உடல்களாக வெளி வீசப்படும் சம்பவங்கள் கணக்கின்றி அதிகரித்து வருகிறது. இது இவ்வாறிருக்க சிறிதளவு மன அமைதிக்காவது பொதுமக்கள் கோவில்களுக்குச் செல்லக் கூட இராணுவம் தடைவிதிக்கிறது. தமிழ் மக்களை தமது அடிமைகளாக நடத்த வேண்டும் என்ற சிங்கள இனவாதத்தின் வெளிப்பாடுகளே இவைகள்.

அப்பாவி மக்கள் – போர் நடவடிக்கைகள் எதிலும் பங்குபற்றாத தமிழ் மக்கள் – இலங்கைத்தீவு முழுவதும் சிறிலங்காவால் பழிவாங்கப்படுவது சாதாரண நிகழ்வாகிவிட்டது. இதனால்தான், கடந்த ஆண்டு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமான 'கபோட்' (CAFOD) இன் பிரதிநிதி யூலியன் பிலோஸ்கி, பிரித்தானிய வெளியுறவுச் செயலர் மல்கம் ரிப்கின்ட்டுக்கு எழுதிய கடிதத்தில், "சிறிலங்கா அரசு ஏற்றுக் கொள்ளப்பட்ட போர் விதிகளைக் கடைப்பிடியாது போரை நடாத்துகிறது" எனத் தெளிவாகக் குறிப்பிட்டார்; இவ்வாண்டின் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை தமிழர்கள் என்கிற இனக்காரணத்திற்காகக் கொழும்பில் கூடத் தமிழர்கள் காரணமின்றிக் கைதாக்கப்பட்டு நீதி விசாரணையின்றி மனித வதைகளை அனுபவிப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, எமது கருத்தில் மட்டுமல்ல சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் கருத்திலும் சிறிலங்கா மனித நேயத்துக்கு எதிரான குற்றங்களைச் செய்வது, தமிழர்களின் அபிவிருத்திக்கான உரிமையை மறுப்பது என்பது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஐ.நா.வின் சட்டங்களின்படி இத்தகைய செயல்களைச் செய்பவர்கள் சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் குந்தகம் விளைவிப்பவர்களாகவே கருதப்படுவர். இத்தகைய செயல்கள் அமைதியான சூழலிலோ அல்லது போர்ச் சூழலிலோ கூட இடம்பெறக்கூடாது என்பது சர்வதேசச் சட்டம். ஆனால் சிறிலங்கா அரசு 1948 முதல் இதனைச் செய்து வந்தமையே தமிழர் பிரச்சினை என்பது உருவாக வழிவகுத்தது. இதனை சனநாயக ரீதியில் தமிழர்களின் தலைமைத்துவங்கள் தொடர்ச்சியாக எதிர்த்து வந்தமை சிறிலங்காவின் ஆயுதப்படை பலம் கொண்டு நசுக்கப்பட்டது. தமிழர்களின் வாழும் உரிமை மறுக்கப்பட்டதினாலேயே, தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் தமது தேசிய விடுதலை இயக்கத்தின் மூலம் தமது ஆயுத எதிர்ப்பை வாழ்வதற்கான இறுதி ஆயுதமாகவும் விடுதலைக்கான ஒரே வழியாகவும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த உண்மையை உலகுக்கு உறுதியாக உணர்த்தி "தமிழீழ மக்கள் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் தலைமையிலும் தேசிய பாதுகாப்புக்கான தேசிய அபிவிருத்திக்கான அரசியல் பொருண்மிய வழிகாட்டலிலும் தனியான மக்களாக தேச அரசாக வேண்டுமெனக் கோரி நிற்கின்றனர்" என்பதனை அறிக்கையிட வேண்டிய பொறுப்பு புலம் பெயர்ந்த தமிழர்களாகிய எம்முடைய கடமையாக உள்ளது. மேலும், ஒரு மக்கள் தம்மை "சுயநிர்ணய உரிமை" உள்ளவர்களாக வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு அவர்களிடமே உள்ளது. இதனைச் செய்வதற்கு ஆக்கிரமிப்பாளன் மேற்கொள்ளும் இராணுவ ரீதியிலான இனஒழிப்பு முயற்சிகளைத் தடுப்பதற்கான, தேசிய பாதுகாப்புக்கான இராணுவப் பலத்தையும் ஆக்கிரமிப்பாளன் அரசியல் பொருண்மிய, சர்வதேச பிரச்சார ரீதியாக மேற்கொள்ளும் ஒடுக்குமுறைகளை எதிர்ப்பதற்கான தேசிய ஒற்றுமையையும் அம் மக்களே உருவாக்கிக் கொள்ள வேண்டும். சுயநிர்ணய உரிமை என்பது ஒரு சர்வதேச தொடர்புக்கான ஊடகமே அல்லாது சுயநிர்ணய உரிமை இதுதான் என எந்த சர்வதேசச் சட்டமும் வரைவிலக்கணப்படுத்தவில்லை. இதன் அடிப்படையே, மக்களது சுயநிர்ணய உரிமை ஒரு தொடர்ச்சியான உரிமை, அதை மக்கள் காலத்துக்குக் காலம் பயன்படுத்தவதற்கான தன்மையை அவர்களே உருவாக்க வேண்டும் என்பதே.

எனவே, எமது தேசிய பாதுகாப்பை பலப்படுத்த எம்மால் இயன்ற நிதி உதவியும் மதி வலிமையையும் அளிப்பதும் எமது தேசிய ஒற்றுமையை வெளிப்படுத்த தமிழீழத் தேச மக்களாக – தேசமாயெழுவதும் புலம் பெயர் தமிழர்களதும் கடமையாகவும் வாழ்வின் ஒரு பகுதியாகவும் உள்ளது. ஏனெனில் சிறிலங்காவின் ஆயுத ஒடுக்குமுறைகளால் அனுதினமும் அழிக்கப்படுவது நமது சொந்த மக்களே. ஆதலால், எமக்கும் அவர்களுக்கும் உள்ள தொப்புள் கொடி உறவை வெளிப்படுத்த தேசமக்களாக எழுவோம். ✷

# சட்டவாக்கு என்பது....

"மேற்குலக நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்ய வேண்டும்" என்ற முனைப்புடன் தீவிரமாகச் செயற்பட்டு வரும் சிறிலங்கா அரசுக்கு இது தொடர்பாக ஏமாற்றங்கள் கிடைத்தவண்ணம் உள்ளன. ஆயினும், பிரத்தானிய வெளிவிவகார அமைச்சரின் வருகையை பெரிய அளவில் எதிர்பார்த்திருந்த போதும் சிறிலங்காவிற்கு அவரிடம் சாதகமான பதில்கள் கிடைக்காமை வருந்தத்தக்கது. இவர்களினால் சிறிலங்கா அரசுக்கு சில உதவிகள் செய்யக்கூடியதாக இருந்தாலும் விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் விடயத்தில் தம்மால் எதுவும் செய்ய இயலாது என்பதைத் தெளிவுபடுத்திவிட்டார். இது குறித்து கொழும்பு வந்த பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் மல்கொம் ரிப்கின்ட் கேள்விகளுக்குப் பதில் தெரிவிக்கையில், பிரிட்டிஸ் சட்டப்படி எந்த ஒரு அமைப்பின் மீதும் நடவடிக்கை எடுக்க இயலாது. பயங்கரவாதச் சட்டத்தில், பயங்கரவாதத்திற்கு ஆதரவான தனியார் மீதே எடுக்க முடியும். அதற்கும் சான்றுகள், எமது நீதி மன்றங்களில் நிரூபிக்க தேவைப்படுகின்றது. இது எம்முடைய சட்ட நீதி எனவும் குறிப்பிட்டார்.

ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு மேற்கு நாடுகளில் இருந்து பெரிதளவு நிதி திரட்டப்படுவதாகவும், அதுவே இலங்கையில் புலிகள் பயங்கரவாதத்திற்கு உதவுகின்றது என்பது சிறிலங்காவின் குற்றச்சாட்டாகும். ஆகையினால், விடுதலைப் புலிகளை வெளிநாடுகளில் தடை செய்வதன் மூலம் இலங்கையிலும் புலிகளின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தலாம் என்பதே சிறிலங்கா அரசின் நோக்கமாகும். ஆனால், இதற்கான முயற்சியை சந்திரிகா அரசு தற்பொழுதுதான் மேற்கொண்டுள்ளது என்பதல்ல. சந்திரிகா அரசு போரை ஆரம்பித்த காலத்தில் இருந்தே இதை மேற்கொண்டு வருகின்றது. ஆனால், அதில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டதாக இல்லை. ஆனால் தற்பொழுது மீண்டும் ஒரு முயற்சியாக, 'சர்வதேசப் பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை' என்ற ரீதியில் அமெரிக்கா தலைமையில் உலகளாவிய முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கையைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்த சிறிலங்கா அரசு தீவிரமான முயற்சிகள் எடுத்து வருகின்றது. இந்த நிலையில், அமெரிக்கா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஆதரவான நடவடிக்கை என்ற ரீதியில் தனது ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் மேற்குலக நாடுகளில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஆதரவு பெறலாம் என முனைந்தது. ஆனால் மேற்கு நாடுகளின் நிலைப்பாடுகள் சற்றுக் குழப்பம் அளிப்பனவையாக இருப்பினும்கூட சிறிலங்கா அரசின் கோரிக்கைகளை நிறைவு செய்யக்கூடியவையாக அவை இருப்பதாக இல்லை. ஒரு வகையில் பார்க்கப்போனால், மேற்குலக அரசுகளின் அரசியல்வாதிகள் சில சமயம் தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்தும் விடுதலைப் புலிகள் குறித்தும் தவறாக கணிப்பீடு செய்துகொண்டால் கூட, அந்த நாடுகளில் நிலவும் சட்ட நீதியானது அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப செயற்பட முடியாமல் செய்கின்றது என்று கூடக் கூறலாம். அதாவது, மேற்குலகத்தில் "சட்டத்திற்கு முன் சகலரும் சமன்" என்பதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் சட்டத்திற்கு உரிய ஆற்றல் உண்டு என்பதினால், இவ்வாறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்றது எனக் கூறலாம். அவ்வாறு சட்டத்தை மீறிச் செயலாற்றும் அரசோ, அன்றி அரசியல்வாதிகளோ அந்த நாடுகளில் அரசியல் வாழ்க்கையைத் தொடர முடியாது என்பதே யதார்த்தமாகும். சுருக்கமாகக் கூறுவதானால், அரசியல்வாதிகளோ – அரசோ, தாங்கள் விரும்பியவாறு சட்டங்களை உருவாக்க முடியாது – உருவாக்கும் சட்டங்களை தனியாக மீறவும் முடியாது. இவ்வாறுள்ள நிலையினால், அரசு விரும்பியோ விரும்பாமலோ புலிகள் இயக்க விவகாரத்தில் சட்டத்திற்குட்பட்டே செயற்பட வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே, தனிப்பட்ட ரீதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை அவர்களால் தடைசெய்ய முடியாதுள்ளது. ஏனெனில், விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்கு நாடுகளில், அந்த நாடுகளின் சட்டத்திற்குட்பட்ட ரீதியிலேயே செயற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், சிங்கள ஆட்சியாளர்களின் அரசுகள், தாங்கள் விரும்பியது போன்று சட்டங்களை உருவாக்குவதையும் – அமுல்படுத்துவதையும் மேற்குலகிலும் எதிர்பார்ப்பது என்பது மடமைத்தனமானதாகும். அதாவது, சிறிலங்கா அரசு தன்னை ஒரு 'ஜனநாயக நாடு" எனக் கூறிக்கொள்கின்றது என்பதற்காக, அதன் ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் யாவும் ஜனநாயக ரீதியானவை என்று உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதல்ல. 'சிறிலங்கா அரசின் சாட்டவாக்கு' என்பது அதிகாரத்தில் இருப்பவர்களது கொல்லைப்புறத்தில் இருந்தே வழிநடத்தப்படுகின்றது என்பதே யதார்த்தமாகும். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அவுஸ்திரேலியாவில் திலீபனின் 9-வது நினைவு தினம்

அவுஸ்திரேலியாவின், சிட்னி நகரத்தில் தியாக தீபம் திலீபனின் 9-வது நினைவு தினம் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு சிட்னிக் கிளையினரால் நடாத்தப்பட்டது. 15-09-96 அன்று கோம்புஸ் ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் இத்தினம் நினைவு கூறப்பட்டது. தமிழர் ஒருங்கிணைப்புக் குழு சிட்னிக் கிளையின் பொறுப்பாளர் திரு. பா. சிறிபாலன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளித்தமைக்காக துரோகக் குழு ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்ட அமரர் விஜயகுமார் அவர்களின் துணைவியார் திருமதி புவனேஸ்வரி விஜயகுமார் அவர்கள் மங்கல விளக்கேற்றினார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த பொதுமக்களுக்கும், வீரமரணமடைந்த போராளிகளுக்கும் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. நூற்றுக்கணக்கான மக்கள் வரிசையாக நின்று, உணர்வுபூர்வமாக தியாகி திலீபனுக்கு மலர் தீப அஞ்சலி செய்தார்கள்.

"நாம் மீட்சி பெற வேண்டும் என்பதற்காக........." என்ற தலையங்கத்தில் கலாநிதி சிறிஸ்கந்தராஜாவும், "ஈழத்தமிழர் போராட்டமும், தியாகி திலீபனும்" என்ற தலையங்கத்தில் திரு. செல்வராசாவும், "திலீபனும் மக்கள் போராட்டமும்" என்ற தலைப்பில் திரு. மனோகரனும் உரையாற்றினார்கள். "மீண்டும் காண்போமா திலீபன் அண்ணாவை" என்ற தலைப்பில் செல்வன். விஜயதாசன் விஜயகுமாரும், "திலீபன் ஒரு சகாப்தம்"என்ற தலைப்பில் திரு. பாலசிங்கம் பிரபாகரனும் கவிதை வாசித்தார்கள். பேச்சுப் போட்டியில் கலந்து கொண்ட சிறுவர், சிறுமியர் உணர்ச்சி பூர்வமாகப் பேசி, பார்வையாளர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்டனர். "பாடும் பறவைகள் கேளுங்கள், மாவீரன் திலீபன் புகழ் பாடுங்கள்" என்ற பாடலுக்கு சிறுமிகள் ஆடிய நடனமும், "விண்ணுலகில் திலீபன்" என்ற நாடகமும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெற்றன. பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு. கணேசலிங்கம் அவர்கள் வெற்றிக் கேடயங்களை வழங்கினார். தமிழீழத் தேசியக் கொடியை திரு. பா. சிறிபாலன் அவர்கள் இறக்கி வைத்ததுடன் நினைவு கூறல் நிகழ்வு நிறைவு பெற்றன. ✷

# மக்களை பலவந்தமாய் ...

பகுதியான லிங்க நகரில் வாழும் தமிழ் மக்களை வெளியேற்றிவிட்டு அங்கு சிங்களவர்களைக் குடியேற்றுவதற்கான முழு முயற்சிகளில், சிறிலங்கா அரச அதிபர் எச்டி சந்திரதாச இறங்கியுள்ளார். சிங்களவரான இவ் அரச அதிபர், ஆயுதப் படையினர் புடைசூழ லிங்க நகருக்குச் சென்று தமிழ் மக்களை வற்புறுத்தி வெற்றுத்தாளில் கையெழுத்திட்டு வாங்குகிறார். பின்னர் சிறிலங்கா அரச அலுவலகத்தில் கடமையாற்றும் சிங்கள ஊழியர்கள், தாம் நினைத்தது போல அப்பத்திரத்தை பூர்த்தி செய்கின்றனர். அதாவது, தமது இருப்பிடங்களில் இருந்து தமிழ் மக்கள் தமது சுயவிருப்பத்தின் பேரிலேயே வெளியேறுகிறார்கள் என்பதான ஓர் தோற்றத்தை உருவாக்குகிறார்கள். இவ்வாறான நயவஞ்சக வேலைகள் மூலம் தமிழர்களின் தாயக பூமி என்ற அடிப்படையை மாற்ற சிறிலங்கா அரசு பகீரதப் பிரயத்தனம் செய்கின்றது.

இதேவகையில், முல்லைத் தீவுக்கு எட்டுமைல் நீளமாக வுள்ள கடற்கரைக் கிராமங்களான அளம்பில், பொக்கனை போன்ற கிராமங்களில் வாழும் தமிழ் மக்களை வெளியேற்றும் நோக்கில், மணலாற்றுப் பகுதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவத்தின் மண்கிண்டி மலை முகாமிலிருந்து நீண்ட தூரம் பாயும் எறிகணை வீச்சுக்கள் இப் பகுதிகள் மீது நடாத்தப்படுகின்றன. இதனால் வீடுவாசல்களைக் கைவிட்டு உள்ளக இடப்பெயர்வுக்கு மக்கள் ஆளாகவேண்டிய துயரநிலை ஏற்படுகிறது.

இது இவ்வாறிருக்க, புத்தளத்தில் பெரும் தேடியழிக்கும் செயற்பாட்டில் சிறிலங்காவின் பொலிசும், இராணுவமும் கூட்டான முயற்சிகளில் இறங்கியுள்ளன. சிலாபம், ஜீவபுரம், கொச்சிமடு போன்ற பகுதிகளில் 35 தமிழ் இளைஞர், யுவதிகளை அரச படைகள் எதுவித காரணமுமின்றி, தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகக் கைது செய்துள்ளன. இப் பகுதிகளில் உள்ள எல்லாத் தமிழ் வீடுகளும் படையினரின் பலத்த சோதனைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றன. ✷

# வீரவிலவைத் தொடர்ந்து அநுராதபுரத்தில்...

நீண்ட நேரப் பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

ஈபீஆர்எல்எப், ஈபிடிபி, டெலோ, ஈரோஸ் (கொழும்புப் பிரிவு), புளொட், ரியு.எல்.எப்., குழுக்களுடன் இப் பேச்சுக்கள் நடாத்தப்பட்டுள்ளன.

இதனை, தமக்கு அளிக்கப்பட்டுள்ள புதிய உற்சாகமாகக் கருதிய இக்குழுக்களில், ஈரோசின் கொழும்புப் பிரிவு சங்கர் ராஜி, "தமிழ் மக்கள் நூறுவீதம் பின்னடைவாக உள்ளனர். எந்த சர்வதேச மத்தியஸ்தமாவது இப் பிரச்சினையைத் தீர்க்கலாம். தமிழீழ விடுதலைப் புலிகளும் அழைக்கப்பட வேண்டும். மூன்றாவது நாட்டு மத்தியஸ்தத்துக்கு இந்தியாவின் ஒப்புதலோ அல்லது பங்குபற்றலோ மகிழ்ச் சிக்குரியது" எனக் கூறியதாகவும், ஏனைய அனைவரும் சர்வதேசப் பயங்கரவாதிகளைத் தீர்ப்பதற்கான அமெரிக்காவின் செயற்பாடுகளின் ஒரு பகுதியாக பார்த்து மகிழ்ந்ததாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

மத்திய வங்கியில் தொண்ணூறு பேர் கொல்லப்பட்டு, ஆயிரத்துக்கு அதிகமானோர் காயமடைந்த சம்பவத்துடன் இணைத்துப் பார்த்துக் கொண்டனர் எனவும் செய்திகள் கூறுகின்றன.

இவ்வாறு சிறிலங்காவின் ஒரு அங்கமாக இயங்கும் இக் குழுக்கள் மகிழ்ந்ததும் அல்லாமல், தம்மையும் ஒரு பொருட்டாக மதித்து அமெரிக்கத் தூதுவர் ஒருவர் இதுவே முதல் தடவையாக அழைத்துப் பேசியதாகவும் பெருமைப்பட்டுள்ளன. ஆனால், கொழும்புத் தகவல்களின்படி புதிதாக வந்துள்ள இரண்டு அமெரிக்கத் தூதரக நிபுணர்களை அறிமுகம் செய்யவென அளிக்கப்பட்ட மதிய போசனத்திற்கே இவர்கள் அழைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கிறது.

ஆனால், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர், நிக்கலஸ் பேர்ண்ஸ் (Nicholas Burns) பத்திரிகைச் செவ்வி ஒன்றில், சிறிலங்கா அரசை விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டாமென தம்மால் ஆலோசனை அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறியதாகவும் - முன்னைய பேச்சுவார்த்தைகளை தன்னிச்சையாக முறித்துக் கொண்ட பதிவுகளை விடுதலைப் புலிகள் கொண்டிருப்பதே - இத்தகைய ஆலோசனைக்குக் காரணம் எனக்கூறியதாகவும் சிறிலங்கா வட்டாரங்கள் பிரச்சாரப்படுத்தி வருகின்றன.

இப்படியான ஒரு செவ்வி உண்மையாக இருப்பின், அமெரிக்கா தெற்காசியாவில் அகலக் கால் வைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளில் ஒன்றாக அதனைப் பார்க்க வேண்டும் என தெற்காசிய இராஜதந்திரிகள் பலர் கருதுகின்றனர். கொங்கொங்கை, பிரித்தானியா அடுத்த ஆண்டு சீனாவிடம் கையளிப்பதால், சிறிலங்காவைத் தனது ஆசியாவுக்கான கைப்பொம்மையாக்கும் அமெரிக்க ஏகாதிபத்திய முயற்சி இதுவென, சிறிலங்காவின் முஸ்லிம் பிரமுகர் ஒருவர் கூறியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவின் இத் தலையீட்டு முயற்சிகளை, இந்தியா மௌனமாக - ஆனால் மிக அக்கறையுடன் அவதானித்து வருவதாக - இந்தியப் பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன. ✷

# அகிம்சையின் தலைவன் தியாகி திலீபன் ...

ஏறெடுத்துக் கூடப் பார்க்கப் படாத நிலையிலும், பன்னிரெண்டு நாட்கள் அகிம்சையின் மீது தான் கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படுத்தி தன் இன்னுயிரைத் தன் தேச மக்களுக்காய் ஈந்த இவ் மைந்தன், தமிழீழ மக்களின் என்றுமே இழக்கப்பட முடியாத சொத்தாக, தமிழீழ வரலாற்றில் பிறப்பெடுத்த புனித தினம் தான் செப்டெம்பர் 26ஆம் திகதி. தியாகி திலீபனாய், மரணத்தை வென்று, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழீழ மக்கள் அனைவருக்கும் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கும் மாவீர மனிதனாய் என்றும் கூடவே வாழும் சத்திய சக்தி தான் தியாகி திலீபன்.

வன்னி மண்ணில் தியாகி திலீபனின் மரணமில்லாப் பெருவாழ்வின் மகத்தான உண்மைகள் நினைவு கூறப்பட்டு, வீரவணக்க மரியாதையுடன் உணர்வுபூர்வமாக தமிழீழ மக்களால் செப்டெம்பர் 15 முதல் நடாத்தப்பட்டு வருகின்றது.

இராணுவ ஆக்கிரமிப்புக்களும், சுற்றி வளைப்புகளுக்குள்ளும் வாழும் அனைத்துத் தமிழ் மக்களும் தியாகி திலீபனின் சத்திய வேட்கை தரும் தென்பில் 'அடக்குமுறை' என்றோ ஒருநாள் பொடிப் பொடியாகும் என உறுதி கூறி தியாகி திலீபனை மனதார அஞ்சலிக்கின்றனர்.

புலம் பெயர் தமிழர்கள் பல வழிகளில் தியாகி திலீபனை நெஞ்சார மனமார போற்றி விழா எடுக்கின்றனர். கூடவே, லண்டன் தமிழீழ மக்கள், அப் புனிதன் உண்ணா நோன்பிருந்த செப்டெம்பர் 15ஆம் நாளிலிருந்து 15 நாட்களுக்கு "தொப்புள் கொடி உறவுக்காக" எனும் வளர்ச்சித் திட்டத்தினை உருவாக்கி, தமிழர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து நாட்டுக்காக உழைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ் அடிப்படையில் தமிழ் மக்களின் வீடுகளுக்குச் சென்று கூடிக் கதைத்து தியாகி திலீபனின் தமிழீழக் கனவை நனவாக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுடன் உடன் இணைந்து எவ்வாறு விடுதலைக்கு உரமூட்டலாம் - வளமளிக்கலாம் எனச் சிந்தித்து செயல் வடிவாக்க இந் நாட்களைப் பயன்படுத்துகின்றனர். ✷

# ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் தமிழர்களை ...

படை மூலம் செய்து வருகிறது.

கூட்டுறவுக் கடைகளுக்கு உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்குச் செல்லும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனியான நுழைவுப் பாதைகள் ஒதுக்கப்பட்டுள்ளதால் கணவன் மனைவி கூட கூடிப்போக முடியாது, பிரிக்கப்பட்டே உள் செல்கின்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சிறிலங்கா இராணுவத்தினர் தமது முகாம்களுக்குச் சுற்றுப் புறத்தில் உள்ள தமிழர்களை சிங்களம் வந்து படிக்கும்படி வலுக்கட்டாயம் செய்வதாகச் செய்திகள் கூறுகின்றன. அவ்வாறே இளம் பெண்களை "நாங்களே உங்களுக்கு சிறந்த கணவன்மார், எங்களைத் திருமணம் செய்யுங்கள்" என வற்புறுத்துவதாகவும் அதற்கு மறுக்கும் பெண்களிடம் பகிரங்கமாகவே அவர்களின் நகைகள், பணம் என்பவற்றைக் கொள்ளையிடுவதாகவும் தெரிய வருகிறது.

மேலும், யாழ். குடாநாட்டுக்குள் உள்ள மக்களை தீவுப் பகுதிகளுக்கு பலவந்தமாக கொண்டு சென்று சட்ட விரோதமான முறையில் தனியான அடையாள அட்டைகள் வழங்குவதற்கான திட்டங்களை சிறிலங்கா தீட்டி வருவதாக மக்களிடையே அச்சம் நிலவுகிறது.

**நீதி விசாரணையற்ற கைதுகளும், படுகொலைகளும்**

யாழ். குடாநாடு எங்கும் அடிக்கடி சுற்றி வளைப்புக்களை மேற்கொள்ளும் இராணுவம், இளைஞர்கள், யுவதிகள், பள்ளி மாணவர்கள் ஆகியோரை கைதாக்கி கடத்திச் சென்று மனித சித்திரவதைகள் புரிந்து இனப்படுகொலைகள் செய்து வருகிறது. சிறிலங்கா இராணுவத்தின் இனஅழிப்புச் செயல்களால் யாழ். குடாநாட்டு வாழ் முழுப் பெற்றோர்களும் பலத்த அச்சத்துடன் காணப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

**தொழில் முயற்சிகள் தடுப்பு**

சிறிலங்கா இராணுவம் கடற்றொழிலாளர்கள் அனைவரையும் கடலுக்கு மீன்பிடிக்க செல்லக் கூடாதென உத்தரவிட்டுள்ளது. மீறுபவர்கள் சுட்டுக் கொல்லப்படுவர் எனவும் எச்சரித்துள்ளது. கடல் வலயத்தைக் கண்காணிக்க தமக்கு மேலதிகமாக 40,000 படையினர் தேவைப்படுவதாகவும் அது தம்மால் இயலாது, ஆகவே கடலுக்கு எவரும் செல்லக்கூடாது என இராணுவம் இத் தடைக்கு காரணம் கூறியுள்ளது. இந்த மிலேச்சத்தனமான செயலால் யாழ். குடாநாட்டில் 30 வீதத்திற்கு மேற்பட்ட பல

தொடர்ச்சி 12 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சந்திரிகாவின் சமாதானத்திற்கான யுத்தமும்

# தமிழீழ விடுதலைப் போராட்டமும்

சமாதானத்திற்கான யுத்தம் என்ற போர்வையில் யாழ் குடாநாட்டின் பல பகுதிகள் இன்று சிங்கள இராணுவப் பிடிக்குள் சிக்குண்டு சின்னாபின்னப் படுத்தப்படுகின்றன. ஈழத்தமிழ் இனத்தையே அடையாளம் காட்டிய வரலாற்று ரீதியான பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்கள் நாளும்

> தமிழீழ விடுதலைப் போராட்டமானது வரலாற்று ரீதியாக, சிங்கள இனவாத, இராணுவ அடக்குமுறை ஆட்சியாளர்களால், ஆக்கிரமிக்கப்பட்ட தமிழீழ மண்ணையும், அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழினத்தையும் விடுவித்து அந்த தேசிய இனத்தின் தனித்துவத்தை நிலைநிறுத்துவதற்கானதாகும்.

சிதைக்கப்படுகின்றன. ஆங்காங்கே அகப்பட்ட மக்களின் அவலங்கள் விபரிக்கமுடியாதவை. அவை ஒவ்வொரு தமிழ் நெஞ்சத்தையும் நெருடிவிடுகின்ற செய்திகளாக நாளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. தமிழினத்தின் எதிர்கால வாழ்வு என்னவாகும் என்ற கேள்வியே இன்று எல்லோர் மத்தியிலும் எழுகின்றது. **"போராடினால் வாழ்வு இல்லையேல் சாவு"** என்பதைத் தவிர வேறு எதையும் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழினத்திற்கு விட்டுவைக்கப் போவதில்லை.

இனவாத அரசியல் பாரம்பரிய வழித் தோற்றலில் வந்தவர்தான் இன்றைய சிறிலங்காவின் சனாதிபதி. சந்திரிகா, இவரும் ஒருபோதும் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றி இத்தீவில் அமைதியை நிலைநிறுத்தப் போவத இல்லை. ஏனெனில், அதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகள் யாவற்றையும் கடந்து என்றுமே தீர்ந்துவிட முடியாத அளவிற்கு மேலும் சிக்கலான அரசியல் சூழ் நிலைக்கே இனப்பிரச்சினையைக் கொண்டுசென்றுள்ளார்.

காலம் காலமாக இத்தீவின் வரலாற்றை நிர்ணயிப்பவர்களாக, சிங்களப் பேரினவாத -பெளத்த பீடங்களே விளங்கிவந்துள்ளன. வரலாறுகளைத் திரிபுபடுத்தி, இந் நாடு சிங்களவருக்கே உரித்தானது என்றும் இதை ஓர் சிங்கள பெளத்த நாடாக மாற்ற வேண்டும் என்பதிலுமே உறுதி பூண்டு செயற்பட்டு வந்துள்ளன. இலங்கைத் தீவு சுதந்திரம் அடைந்த திலிருந்து, இன்றுவரை வரலாற்றை மீட்டுப் பார்ப்போமானால், பெளத்த தர்மத்தையே, குழிதோண்டிப் புதைத்து விட்டு தமிழினத்தையே அழித்துவிடத் துடிக்கும் தேரோக்களின் கொள்கை களையும் வழிகாட்டல்களையும் பிரதி பலிப்பவர்களாகவும் நடைமுறைப் படுத்துபவர்களாகவுமே சிங்கள ஆளும் வர்க்கங்கள் போட்டிபோட்டு வந்துள்ளன. பேச்சுவார்த்தை, சமாதானம் என்று இவர்கள் கூறுவதெல்லாம் உலகத்திற்குக் காட்டுவதற்கேயன்றி வேறு எதுவுமில்லை. பேச்சுவார்த்தைகளுக்கான சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகள் எல்லாம் தமிழர்களின் அழிவுகளுக்கு வழிசமைத்துக் கொடுத்ததுடன் போராட்டத்தைப் பின்னடையச் செய்யவுமே வழி வகுத்தன.

தான் ஆட்சிக்கு வந்ததும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஓர் நிரந்தரமான அரசியல் தீர்வினைக் காணப் போவதாகக் கூறி, ஆட்சி அதிகாரத்திற்கு வந்தவர்தான் இன்றைய சனாதிபதி சந்திரிகா. அதன்படி, அவரது அழைப்பை ஏற்று விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தைகளிலும் ஈடுபட்டனர்.

இந்தியப் படைகளின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து 1990இல் இருந்து 1995 வரை அதாவது, சுமார் 5 வருடகாலமாக ஐ.தே.கட்சி அரசு, பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தித் தமிழ் மக்களுக்கு எதிரான கொடூரமான இராணுவ அடக்கு முறைகளையும் கட்ட விழ்த்து விட்டிருந்தது. சந்திரிகா ஆட்சிக்கு வந்ததும் தமிழ் மக்கள் எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். தாங்கள் எதிர் நோக்கிய பொருளாதார நெருக்கடிகளிலிருந்தும் இராணுவ விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் இருந்தும் தங்களை விடுவிப்பார் என்று நம்பி இருந்தனர். ஆனால், நடந்ததோ வேறு. இது இவ்வாறு இருக்க, நடைபெறப் போகும் பேச்சு வார்த்தையில் விடுதலைப் புலிகள் தமிழ் ஈழம் என்ற இலட்சியத்திலிருந்து எது வரையில் இறங்கி வந்து சமாதானத்தை நிலை நாட்ட ஒத்துழைப்பார்கள் என்று சர்வதேசமும், சிங்கள தேசமும் ஆவலுடன் எதிர் பார்த்திருந்தன.

ஆனால், விடுதலைப் புலிகளோ எவ்வித நிபந்தனைகளையும் முன்வைக்காமல் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையான பொருளாதாரத் தடையை நீக்கிவிடுமாறும் பூநகரி, இராணுவ முகாமை அகற்றி ஒரு போக்குவரத்துப் பாதையை ஏற்படுத்திக் கொடுக்குமாறுமே கேட்டிருந்தனர். நான்கு கட்டங்களாகப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்த போதிலும் அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வில்லை. மாறாக, இராணுவ தந்திர மூலோபாயங்களுடன் ஒப்பிட்டு அவற்றை நிராகரித்துவிட்டார் சந்திரிகா. அது மாத்திரமன்றி, பேச்சுவார்த்தை நடை பெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் இராணுவத் தளபாடங்களை வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து கொண்டு பாரிய இராணுவத் தாக்குதலுக்கும் தனது படைகளைத் தயார் படுத்திக்கொண்டிருந்தார். இவ்வாறு நடந்துகொண்டதன் மூலம், தமிழ் மக்களுக்கும் உலகுக்கும் தான் இனப் பிரச்சினையைச் சமாதான வழியில் தீர்த்து வைப்பதில் நம்பிக்கை இழந்தவராகவும் இராணுவத் தீர்விலேயே நம்பிக்கை கொண்டுள்ளவராகவும் தன்னை அடையாளம் காட்டியுள்ளார்.


இன்று குடாநாட்டின் புனர்நிர்மான வேலைக்கு பல வழிகளிலும் உதவி கோரியுள்ள சந்திரிகா, தான் தமிழ் மக்களுடன் பேசப் போவதாகக் கூறி உலகத்தின் கண்களை மறைக்கப் பார்க்கிறார். விடுதலைப் புலி களோடில்லாமல் தமிழ் மக்களோடு பேசப் போவதாக அவர் ஆட்சிக்கு வந்ததிலிருந்து இன்றுவரை கூறி வருகின்றார். அப்படியானால், தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு - அவர்களின் பெயரால் -அவர்களின் அவலங்களால் - கொழும்பில் வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கும் தமிழ் குழுக்களுடனும், தேசிய பாதுகாப்பு நிதி செலுத்தி தமிழின அழிப்பிற்கு மேலும் துணைபோகும் சில கொழும்புத் தமிழர்களுடனுமே அது சாத்தியமாகலாம். ஆனால், சந்திரிகாவின் சிங்களப் படைகள் இன்று ஆக்கிரமித்திருப்பது, தமிழர்களின் தாயக பூமியான **தமிழீழ மண்ணை** என்பதை மறந்துவிடக் கூடாது. மக்களையும் புலிகளையும் பிரிப்பது என்பது சந்திரிகா அரசின் கனவுலகக் கற்பனையாகும்.

விடுதலைப் புலிகள் வேறு – தமிழ் மக்கள் வேறு என்று பிரித்துவிட முடியாது. இந்த மக்களிலிருந்து வந்தவர்கள் தான் விடுதலைப் புலிகள். இந்த மக்களால் வளர்க்கப்பட்டவர்கள் தான் அவர்கள். இந்த மக்களின் நிலையான விடிவிற்காக அந்தப் போராளிகள் செய்த தியாகங்கள், அற் பணிப்புகள் அளப்பரியவை. அவற்றை யெல்லாம் மறந்து, அற்ப சலுகை களுக்காகத் தமிழீழ மக்கள் தாங்கள் அடிப்படை உரிமைகளை இழக்க முடியாது. இதுவரை காலமும் இந்த மக்களின் காப்பரனாக நின்று வீரவரலாறு படைத்த புலிகள் இயக்கத்தின் தலைமை ஒருபோதும் தமிழினத்தைக் காட்டிக் கொடுத்துவிடாது என்பது சந்திரி காவுக்கும் சிங்கள மக்களுக்கும் மட்டு மல்ல இந்த உலகத்திற்குமே தெரிந்த விடயம். ஆகவேதான் விடுதலைப் புலிகளுடன் சந்திரிகா பேச மறுக்கின்றார். அப்படிப் பேசுவதானால், தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளை ஓரளவேனும் நிறைவேற்றியாக வேண்டும். அப்படிச் செய்வதானால் சிங்களப் பேரினவாத - பெளத்த பீடங்களின் கொள்கையை நடை முறைப்படுத்த முடியாமல் போவதுடன் தான் ஆட்சிப்பீடத்திலும் நிலைத்திருக்க முடியாமல் போய்விடும். ஆகவே, தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து தமிழர்களின் தேசிய வளங்களைச் சிதைப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழித்துவிடலாம் அல்லது பல வீனமடையச் செய்யலாம் என்பதே ரத்வத்தையினதும், சந்திரிகாவினதும் நீண்டகாலத் திட்டமாகும். அவர்கள்

> சந்திரிகாவின் சமாதானத் திற்கான யுத்தமானது, எழுச்சி கொண்ட தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் விடுதலைப் புலிகளை அழித்து அல்லது பலவீனமடையச் செய்து தான் கொடுக்க நினைப்பதை தமிழ் மக்கள் மீது திணித்து விடுவதற் கானதாகும்.

- நவயுகன்

தொடர்ச்சி 15 ம் பக்கம்....



www.tamilarangam.net



# வஞ்சிக்கப்பட்ட தமிழர்: வாக்குறுதிகளும் சூழ்ச்சிகளும்!



சென்ற இதழ்த் தொடர்ச்சி

**1945** இல் டி.எஸ். சேனநாயக்கா அரசசபையில், தோட்டத் தொழிலாளர் பற்றிக் கூறுகையில், தோட்டத் தொழிலாளர்கள் நாடற்றவர்கள் ஆக்கப்படுவார்கள் என்றொரு பிழையான அபிப்பிராயம் உண்டு என்றும், உண்மை அவ்வாறானது அல்ல என்றும் கூறியதோடு, மேலும், "நாங்கள் இந்தியர்களை மதிக்கிறோம், அவர்களை நேசிக்கிறோம், அவர்களை முன்னுதாரணர்களாகக் கொள்வோம்" என்றும் கூறியிருந்தார்.

(ஹன்சாட், நொவம்பர் 8, 1945, சி 7100 - 7101)

இவ்வாறு சுதந்திரத்திற்கு முன்பு கூறிய டி. எஸ். சேனநாயக்கா, சுதந்திரம் அடைந்ததும், தான் முன்பு கூறியதற்கு மாறாக, தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையையும் பிரஜா உரிமையையும் பறித்து, அவர்களை நாடற்றவர்களாக்கினார்.

6) "எமது முக்கியமான கைங்கரியம் இத்தேசத்தை ஒரு மொழியால் அன்றி இரு மொழியாலும் கட்டி எழுப்புவதாகவே உள்ளது" என்று, 1948 இல் டி. எஸ். சேனநாயக்கா சொன்னார்.

(சமூக, சமய நடுநிலையம், சிறிலங்காவில் இன மதம், கொழும்பு, (1978 பக். 72)



7) 1951 இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியிட்ட கொள்கைப் பிரகடனத்தில், சிங்களமும் தமிழும் நாட்டின் உத்தியோக மொழிகளாக்கப்பட வேண்டும் என்பது மிகவும் அத்தியாவசியமான விடயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைப் பிரகடனமும் யாப்பும், 1951)

8) "தமிழும் சிங்களமும் இலங்கையின் தேசிய மொழியாகவும், உத்தியோக மொழியாகவும் இருக்க வேண்டுமென்று தீர்மானித்துவிட்டோம். அதனை விரைவில் நடை முறைப்படுத்துவதற்கென ஒரு விசாரணைக் கொமிசனை நியமித்துள்ளேன். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக தமிழும் சிங்களமும் உத்தியோக மொழியாகச் செயற்படுத்தப்படும்" என்று, டி. எஸ். சேனநாயக்கா, 1951 இல் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

(ஹன்சாட், யூலை 24, 1951, சிசி 1550 - 1551)

9) 1954 இல் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல மக்கள் மத்தியில் உரையாற்றுகையில், "எனது அரசாங்கம் வகுப்புவாதத்தை முற்றும் நிராகரிக்கின்றது. அது சிங்களத்துடன் தமிழுக்கும் இலங்கை முழுவதும் சம அந்தஸ்த்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்துள்ளது. இது வெறும் வார்த்தை ஜாலம் அல்ல. இவ்வுறுதிமொழியை எழுத்துக்கெழுத்து நடைமுறைப 'படுத்துவேன்" என்று கூறினார்.

> ஒரு தருணத்தில் தமிழ் மக்களின் உரிமைகளைச் சிங்களத் தலைவர்கள் ஏற்றும் ஆதரித்தும் பேசுவர். இன்னொரு தருணத்தில் - அதிகாரத்திலமர்ந்து தம்மை உறுதிப்படுத்திக்கொண்ட பின் - தமிழ் மக்களுக்கெதிராகச் சிங்கள மக்களைத் தூண்டுவதுடன், உள்நாட்டு வெளிநாட்டுச் சக்திகள் அனைத்தையும் ஒன்றிணைத்து, முழு அளவில் தமிழரை ஒடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவர்.

(இந்து ஓகன், ஒக்ரோபர் 1, 1954)

ஆனால், கொழும்பு சென்றதும் இவர் இதனை மறுத்துரைத்தார்.

10) 1955 இல் லங்கா சமசமாஜக் கட்சி, நாடாளுமன்றத்தில் தமிழும் சிங்களமும் உத்தியோக மொழியாக்கப்படவேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டு வந்த போது, கொத்தலாவலை அரசாங்கம் அதை எதிர்த்தது.

11)தமிழுக்குச் சம அந்தஸ்த்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று என். எம். பெரேரா பல காரணங்களைக் காட்டி உரையாற்றுகையில், தன்னை எதிர்த்து நின்ற கொத்தலாவல அரசாங்கத்தையும் சுதந்திரக் கட்சியையும் பார்த்துக் கூறினார்: "வட - கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்குத் தமிழைப் பிரதேச மொழியாகவும் சிங்கள மொழியை மட்டும் உத்தியோக மொழியாகவும் ஏற்குமாறு நிர்ப்பந்திப்பீர்களேயானால், அது இந்நாட்டில் இரத்தக் களரியையும் இனக் கலவரங்களையும் சிவில் யுத்தத்தையும் உண்டாக்கும்."

(ஹன்சாட், ஒக்டோபர் 19, 1955, சிசி 572-626)

12) பண்டாரநாயக்கா 1926 இல் எழுதியதற்கும் 1944 இல் பேசியதற்கும் முரணாக, 1956 இல் தனிச் சிங்கள மசோதாவை நாடாளுமன்றிற் தாக்கல் செய்தபோது, இலங்கைக் கொம்யூனிஸ்ட்டுகளும் சமசமாஜிகளும் அதைக் கடுமையாக எதிர்த்து, தமிழையும் உத்தியோக மொழியாக்க வேண்டும் என்று வாதாடினர். இதில் உரையாற்றிய என். எம். பெரேரா பின்வருமாறு கூறினார். "கடந்த கால வரலாற்றைப் பின்நோக்கிப் பார்த்தீர்களேயானால், சிறுபான்மை இனங்களை, சாத்தியமான ஒவ்வொரு கட்டத்திலும் டி. எஸ் சேனநாயக்கா காலத்தில் இருந்து நீங்கள் ஏமாற்றி – துரோகம் செய்து வருவதைக் காணமுடியும். ஒரு கட்டத்தில் வாக்குறுதி அளித்துவிட்டு, பின்பு அதை வேறொரு கட்டத்தில் மீறுவதை வரலாறு முழுவதிலும் காணலாம்."

(ஹன்சாட், யூன் 1956, சி 1861)

இவ்விவாதத்தில் கொல்வின் ஆர். டி. சில்வா பேசுகையில், "எமது மக்களுக்கு ஒரு அரசு வேண்டுமா அல்லது இரு அரசுகள் வேண்டுமா? ஒரு இலங்கை வேண்டுமா அல்லது இரு இலங்கை வேண்டுமா? ஒரு சுதந்திரமான இலங்கை வேண்டுமா அல்லது இரத்தம் சிந்தும் இரு துண்டுகளாக்கப்பட்ட இலங்கை வேண்டுமா?" என்று கேள்வி எழுப்பியதோடு தொடர்ந்து பண்டாரநாயக்காவைப் பார்த்து, "தமிழர்களை நீ பிழையாக நடாத்துவாயானால், அவர்களை நீ புண்படுத்துவாயானால், அவர்களை நீ பிழையாகப் பிரயோகிப்பாயானால், அவர்களை நீ ஒடுக்கினால், துன்புறுத்தினால் அதன் விளைவாக இலங்கையில் இனத் தனித்துவமும் மொழித் தனித்துவமும் பாரம்பரியமும் உடைய தமிழர் ஒரு புதிய தேசிய இன உணர்வுடன் எழுந்து, இப்போது கோருவதை விடவும் அதிகம் கோரும்போது, நீ அதை வழங்கவேண்டி வரும்" என்று எச்சரித்தார்.

> "தமிழர்களை நீ பிழையாக நடாத்துவாயானால், அவர்களை நீ புண்படுத்துவாயானால், அவர்களை நீ பிழையாகப் பிரயோகிப்பாயானால், அவர்களை நீ ஒடுக்கினால், துன்புறுத்தினால், அதன் விளைவாக – இலங்கையில் இனத் தனித்துவமும், மொழித் தனித்துவமும், பாரம்பரியமுமுடைய தமிழர் ஒரு புதிய தேசிய இன உணர்வுடன் எழுந்து, இப்போது கோருவதை விடவும் அதிகம் கோரும்போது நீ அதை வழங்கவேண்டிவரும்."

(ஹன்சாட், யூன் 1956, சி 1913)

இலங்கைத்தீவின் சிறுபான்மை மக்களுக்கு அரசியல் அமைப்பு வாயிலாகப் பிரித்தானிய ஆட்சியாளர் வழங்கிய இறுதிப் பாதுகாப்பை - 29வது சரத்தை இதே கொல்வின் நீக்கிவிட்டு, சிங்கள பௌத்த குடியரசாக இலங்கைத் தீவினைப் பிரகடனம் செய்யும் புதியதோர் அரசியல் அமைப்பை உருவாக்கிய பெருமகனாக விளங்கினார் என்பது, பின்னைய வரலாறாகும்.

தமிழரின் மொழியுரிமை சம்பந்தமாக வாக்குறுதியை மீறியதுடனேயே சிங்களவர்களின் பிரதான கட்சிகளின் வஞ்சகம் தெளிவாகியது. இதன் பின்பும் தமிழ்த் தலைவர்கள், ஐக்கியத்தின் பொருட்டும் சமாதானத்தின் பொருட்டும் சிங்களத் தலைவர்களுடன் ஒப்பந்தம் செய்வதிலீடுபட்டனர். 1957இல் பண்டாரநாயக்கா, எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். ஆனால் இவ் ஒப்பந்தத்தைப் பண்டாரநாயக்கா ஒருதலைப்பட்சமாகக் கிழித்தெறிந்தார். இதன் பின்பு பண்டாரநாயக்கா அரசின் கீழ், 1958இல், பாரிய இனப்படுகொலை கட்டவிழ்த்து விடப்பட்டது. இதுபற்றிய விபரங்களைத் தார்சி வித்தாச்சி என்ற சிங்களப் பத்திரிகையாளர், (EMERGENCY '58) என்ற நூலில் விபரமாகப் பின்வருமாறு தந்துள்ளார்.

1956இல் தனிச்சிங்கள மசோதாவைப் பண்டாரநாயக்கா சமர்ப்பித்தவேளை, கல்லோயாவில் சிங்களக் குடியேற்றவாசிகளால் 156 தமிழ் விவசாயிகள் வெட்டிக் கொல்லப்பட்டபோது அதைப் பார்த்துக்கொண்டிருந்த பண்டாரநாயக்கா, 58இல் இனப்படுகொலையின் போதும் அவ்வாறே நடந்துகொண்டதாக, தார்சி வித்தாச்சி வர்ணித்துள்ளார். தமிழர்கள் வெட்டியும், உயிருடன் தீ வைத்தும்

- மு.திருநாவுக்கரசு

தொடர்ச்சி 7ம் பக்கம்...

www.tamilarangam.net



கொல்லப்பட்டவேளை – தீவு முழுவதும் தமிழரின் சொத்துக்களும் உயிர்களும் அழிக்கப்பட்டுக்கொண்டிருந்தவேளை – நான்கு நாட்கள் கழிந்த பின்பும், அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துமாறு பிரதமர் பண்டாரநாயக்காவிடம் சில கொழும்புவாழ் தமிழ்ப் பிரமுகர்கள் கோரியபோது, "இது ஒரு அற்ப விடயம். இதைப் பெரிதுபடுத்தாதீர்கள்" என்று தட்டிக் கழித்தார். மொத்தத்தில் இவ் இனப்படுகொலையைப் பார்த்துத் தார்சி வித்தாச்சி, பின்வருமாறு தனது நூலை முடிக்கிறார். "நாம் (இரு இனங்களும்) பிரிந்துபோகும் நிலைக்கு வந்துவிட்டோமா? சிந்திக்கும் ஆற்றல் உடையவர்கள் நம்புகிறார்கள் - ஆம் அப்படித்தான் என்று."

3) 1947இற்கும் 1972இற்கும் இடைப்பட்ட காலத்தில் நடைமுறையிலிருந்த அரசியல் அமைப்பை உருவாக்கிய சோல்பரி, 1963இல் ஒரு நூலின் முன்னுரையில், ''டி. எஸ்.

> **"யாழ்ப்பாணத்தவரின் உயிர்களைப் பற்றியோ அவர்கள் எம்மைப் பற்றி என்ன நினைக்கின்றார்கள் என்பது பற்றியோ எமக்குக் கவலை இல்லை."**

சேனநாயக்கா உயிருடன் இருந்திருப்பாரேயானால் 1958இல் நிகழ்ந்த இனப்படுகொலை போன்றதொரு துயரநிலை இலங்கையில் ஏற்பட்டிருக்க முடியாது" என்றும், "தூரதிருஷ்டியற்ற சிங்களத் தலைவர்கள், தமது தேர்தல் வெற்றிக்காக இன, மொழி, மத உணர்வுகளைத் தூண்டியுள்ளனர்" என்றும் கூறியுள்ளதுடன், "இலங்கையின் அரசியற் போக்கு எனக்கும், அரசியல் யாப்பை உருவாக்கிய எமது நண்பர்களுக்கும் ஏமாற்றமாகப் போய்விட்டது" என்றும் கூறியுள்ளார்.

மேலும், டி. எஸ். சேனநாயக்கா மீது நம்பிக்கை வைத்ததால்தான் தானும் தனது நண்பர்களும் மேற்படி அரசியல் அமைப்பை உருவாக்கியதாகவும், அதற்காகத் தற்சமயம் வேதனைப்படுவதாகவும் கூறியுள்ளார். [Soulbury , "Foreword", B.H. Famer, **Ceylon: A Divided Nation**, London, 1963]

தனது அரசியல் அமைப்புப் பிழையென்பதை, அதை உருவாக்கிய வெள்ளையரே உணர்ந்திருந்ததை இது தெளிவுபடுத்துகின்றது.

4) 1965இல், செல்வநாயகம் பிரதமர் டட்லி சேனநாயக்காவுடன் ஒப்பந்தம் செய்தாராயினும், பின்பு டட்லியினால் அது முற்றிலும் கைவிடப்பட்டது.

5) "நான் இலகுவில் வாக்குறுதி அளிக்கமாட்டேன். அப்படி அளித்தால், அதை நிறைவேற்றுவதில் ஒருபோதும் பின்நிற்கமாட்டேன்" என்று, 1966இல் டட்லி சேனநாயக்கா கூறினாராயினும், அவர் 1968இல், டட்லி – செல்வா ஒப்பந்தத்தை அப்படியே கைவிட்டாரென்பது குறிப்பிடத்தக்கது.

16) 1966இல் இடதுசாரிகள் நடாத்திய மே தின ஊர்வலத்தில், தமிழரை "தோசை, மசால வடை" என்று கிண்டல் செய்து கோசமெழுப்பினர்.

17) 1972இல் அரசியல் யாப்பை எழுதிய கொல்வின் ஆர். டி. சில்வா, முந்திய சோல்பரி அரசியல் அமைப்பில் – பெயரளவிலாவது காணப்பட்ட – சிறுபான்மையினருக்கான பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட 29வது சரத்தை நீக்கினார்; அத்தோடு, தனிச்சிங்களச் சட்டத்தை அரசியல் அமைப்பு விதியுமாக்கினார். மேலும், நவீன வரலாற்றில் முதன்முறையாக பௌத்தத்தை அரச மதமாக்கினார். இவையெல்லாம் இடதுசாரிகளின் அப்பட்டமான துரோகங்களாகும்.

18) 1977இல் ஜே. ஆர். பதவிக்கு வந்து சில மாதங்களில், நாடு தழுவிய ரீதியில் தமிழருக்கெதிரான இனப்படுகொலை கட்டவிழ்த்துவிடப்பட்டது. படுகொலை நிகழ்ந்துகொண்டிருந்த வேளை, ஜே. ஆர். நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், "போரா சமாதானமா?" என்று கேட்டார். இது கண்டி மன்னன் விமலதர்மசூரியன் டச்சுத் தளபதிக்கு அனுப்பிய செய்தியாகும். இதையே நவீன காலத்தில், தமிழர்களுக்கெதிராகச் சொன்ன ஜே. ஆர். "இவ்வாறு நான் சொல்லவில்லை; சிங்கள மக்கள் சொல்கிறார்கள்" என்றும் கூறினார்; இது வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டது.


(ஹன்சாட், 1977 ஓகஸ்ட் 18, சி.சி 242 - 246)

19) ஜே. ஆரின் முக்கிய அமைச்சர்களுள் ஒருவரான லலித் அத்துலத் முதலியை அவருடைய ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்துச் சகாவாகிய டேவிட் செல்போர்ண் 1982இல் சந்தித்தபோது, "தமிழர்களின் பிரச்சினைக்கு என்ன தீர்வு காணப்போகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு லலித் கூறிய பதில், "தமிழர்களின் தலைகளை நொருக்கப்போகிறோம்."

[David Selbourne, "David Selbourne Rides Again", **Saturday Review**. 10-08-85]

20) 1983 யூலையில் ஜே. ஆரின் ஆட்சியில், இலங்கை முன்னெப்பொழுதிலும் கண்டிராத தமிழ் இனப்படுகொலை நடந்தது. இதில் தமிழர்கள் அநாதரவாகக் கொல்லப்பட்டனர். அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இப் பெரும் இனப்படுகொலையின் துயரத்தைச் சிங்கள எழுத்தாளரான எல். பியதாஸ என்பவர் **Holocaust and After** என்ற நூலில் விபரமாகத் தந்துள்ளார். குறிப்பாக, சிரேஷ்ட அமைச்சர் காமினி திசநாயக்கா, இனப்படுகொலையைத் தலைமைதாங்கி நடத்தியதுபற்றி இந்நூல் தெளிவாக விபரித்துள்ளது. (பக். 83 - 84)

இக்கலவரத்தின் பின்பு ஜே. ஆரைச் சந்தித்த பத்திரிகையாளரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், "யாழ்ப்பாணத்தவர்களின் உயிர்களைப் பற்றியோ, அவர்கள் எம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றியோ எமக்குக் கவலை இல்லை" என்று, பொறுப்பான ஜனாதிபதி பதவியிலிருந்த அவர், வெளிப்படையாகவே கூறினார். (சண்டே ஒப்சேவர், ஆடி 17, 1984)




21) உள்நாட்டில் தமிழ்த் தலைவர்களைச் சிங்களத் தலைவர்கள் ஏமாற்றியதன் பின்பு, இந்திய அரசுடன் ஒரு கபடத்தனமான ஒப்பந்தத்தில், 1987இல், ஜே. ஆர். கைச்சாத்திட்டார். அந்த ஒப்பந்தத்தைக் குழப்புவதில் சிங்களவர் கண்ணும் கருத்துமாய் இருந்தனர். விடுதலைப் புலிகளின் தளபதிகள் சிலரைக் கடலில் கைது செய்து அவர்களைக் கொழும்புக்குக் கொண்டுவருமாறு லலித் நிர்ப்பந்தித்தார். இது ஒப்பந்தத்தைக் குழப்பும் வகையில் நிலைமைகளைத் தூண்டுமென்றும், இதனால், புலிகள் இந்தியப்படைகளுடன் மோதும் நிலை தோன்றும் என்றும் எதிர்பார்த்துத்தான் தான் இவ்வாறு நடந்துகொண்டதாக, அத்துலத் முதலி, புருஸ் போலிங் என்ற வெளிநாட்டுப் பத்திரிகையாளரிடம் கூறியுள்ளார். [Bruce Palling, "An Independent View From London" , **The Sunday Times**, 02-05-1993, Reproduced from Independent (London) ]

> 1958இல், தமிழர்கள் வெட்டியும் உயிருடன் தீ வைத்தும் கொல்லப்பட்டவேளை – தீவு முழுவதும் தமிழரின் சொத்துக்களும், உயிர்களும் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தவேளை – நான்கு நாட்கள் கழிந்த பின்பும், அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துமாறு பிரதமர் பண்டாரநாயக்காவிடம் சில கொழும்புவாழ் தமிழ்ப் பிரமுகர்கள் கோரியபோது, "இது ஒரு அற்ப விடயம் இதைப் பெரிதுபடுத்தாதீர்கள்" என்று தட்டிக்கழித்தார்.

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சரான அத்துலத் முதலியும் அவர் அங்கம் வகித்த ஜே. ஆர். அரசும், எப்படிக் கபடத்தனமாய் ஒப்பந்தத்தைச் செய்து பின்னர் அணுவணுவாகத் திட்டமிட்டு – இறுதியில் அதை முறித்துக் கொண்டனர் என்பதை, இது தெளிவாகக் காட்டுகிறது.

22) 1994இல், 'த சண்டேலீடர்' பத்திரிகைக்கு டிக்சிற் அளித்த செவ்வியில், ஒப்பந்தத்திற்கு முதலில் காலை வாரியது சிங்களவர்களே என்று கூறியிருந்தார். "ஒப்பந்தத்தில் கூறப்பட்டவாறு தமிழ் மொழிக்கு வழங்கப்பட்டிருந்த அந்தஸ்தை நடைமுறைப்படுத்துவதில், அரசு வீணாகக் காலதாமதம் காட்டியது. அரசு எதையும் நடைமுறைப்படுத்த விரும்பாமல், தேவையற்ற உரையாடல்களில் ஈடுபட்டிருந்தது. கைது செய்யப்பட்டிருந்த 17 விடுதலைப் புலி இளைஞர்களையும் கொழும்புக்குக் கொண்டுவர வேண்டுமென்று லலித் வற்புறுத்தியதே, புலிகள் ஒப்பந்தத்தில் இருந்து பின்வாங்கக் காரணமாய் அமைந்தது" என்று, அவர் மேலும் கூறியிருந்தார்.

('த சண்டே லீடர்' , புரட்டாதி 04, 1994)

23) ஜே. ஆர். பதவியிலிருந்து இறங்கி வ ட டி ல ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும் காலத்தில், பத்திரிகையாளர் ஒருவருக்கு அளித்த பேட்டி வருமாறு:

கேள்வி: இந்தக் கட்டத்தில் வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கான மிகச்சிறந்த தீர்வு எதுவென நீங்கள் உணர்கிறீர்கள்?

பதில்: அது சமஷ்டி முறைதான்.

கேள்வி: நீங்கள் ஜனாதிபதியாக இருந்தபோது ஏன் அதைச் செய்யவில்லை?

பதில்: அந்தநேரத்தில் மக்கள் சமஷ்டிக்குத் தயாராக இருக்கவில்லை.

இவ்வாறு கபடத்தனமான முறையில் சிங்களத் தலைவர்கள், காலத்துக்குக் காலம் தமிழர்களை வஞ்சித்திருக்கிறார்கள். இந்த வகையில், தனது வாக்குறுதிகளால் உலகை ஏமாற்றும் முயற்சியில் – முன்னைய சிங்களத் தலைவர்களை விடவும் – அதிகம் மெருகு பெற்ற நவ இனவாதியாக, சந்திரிகா செயற்படுகின்றார்! ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக அறப்போர் தொடுத்த மைந்தன்

15-09-1987 காலை மணி 8.30. தமிழீழப் போராட்ட வரலாற்றில் வைரத்துரிகை கொண்டு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தியாக நாள். ஆம். தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளரும், தமிழினத்தின் விடிவெள்ளியுமாகிய லெப். கேணல் திலீபன் (இராசையா பார்த்தீபன்) அவர்கள், நல்லூர் வடக்கு வீதியிலுள்ள 'கந்தன் கருணை" இல்லத்தின் முன், அமைதிப்படை என்ற பெயரில் வந்த, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக அறப்போர் தொடுத்த பொன் நாள்.

இந்நாளில் தான் திலீபன் அவர்கள் தமிழீழ மக்களினதும், தமிழர் தாயகத்தினதும் இழந்த உரிமைகளை மீட்கும் நோக்கமாக, இந்திய அரசினதும், இந்திய மக்களினதும் கவனத்தை ஈர்க்கும் வகையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் நியாயமான ஐந்து கோரிக்கைகளை முன் வைத்துச் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

1) பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.

2) புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

3) இடைக்கால அரசு நிறுவப்படும் வரை 'புனர்வாழ்வு' என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

4) வடக்கு – கிழக்கு மாகாணங்களில் சிறிலங்காப் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

5) இந்திய அமைதிப் படையின் மேற்பார்வையில், ஊர்காவற் படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றில் குடிகொண்டுள்ள இராணுவப் பொலிஸ் நிலையங்கள் மூடப்படல் வேண்டும்.

ஆகியனவே விடுதலைப் புலிகளினால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளாகும்.




இவைகள் இந்திய அரசால் அலட்சியப்படுத்தப்பட்டன.

நீர்கூட அருந்தாது தன்னை வருத்தி தமிழ் பேசும் மக்களுக்காய் தனது தியாகப் பயணத்தைத் தொடங்கிய திலீபன், தனது அகிம்சை வழியிலான அப்போராட்டத்தின் உறுதியை, விடுதலைப் புலிகளின் இலட்சிய வேட்கையை இந்தியாவுக்கு மட்டுமல்ல முழு உலகிற்குமே எடுத்துக் காட்டினான்.

அகிம்சைப் போராட்டத்திற்கே ஆணி வேராகத் திகழ்ந்த அண்ணல் காந்தி அடிகள் கூட, தனது உண்ணாவிரதப் போராட்டங்களை நீராகாரம் அருந்தித் தானே நடாத்தினார். ஏன்? ஐரிஸ் போராட்ட வீரன் 'பொபி சாண்ட்ஸ்' கூட நீராகாரம் அருந்தித் தான். சிறைக்குள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டார். ஆனால் நம் தியாக மைந்தனோ, நல்லூர்க் கந்தன் வீதிகள் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிய, மக்கள் எல்லோரும் கண்ணீர் சிந்தியபடி விழித்திருக்க, மருத்துவ வசதிகளையும் ஏற்காது நீரும் அருந்தாது உண்ணா நோன்பிருந்து, உலகில் புதிய அத்தியாயமொன்றை பதித்து, விடுதலைப் போராட்டத்திற்கு மட்டுமல்ல, எம் இனத்திற்கே பெருமை சேர்த்தார்.

இவ் வீரவேங்கையின் காலத்தால் அழியாத தியாக மரணம், தமிழ்த் தேசிய இனத்தின் ஓர் வரலாற்று முக்கியமான நிகழ்வாகவும், தமிழரின் உறுதியையும் தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது. ✷



## திலீபனே உனையென்றும் இதயத்தில் வைப்போம் !

கண்ணாடி போட்ட முகம் - எப்போ
கண்டிடுவோம் ஈழமதை என்றமனம்
நின்றாடுதடா நினைவில்
எதிரியினை
திண்டாட வைத்த எங்கள் திலீபனே - நீ
நின்றாடும் களமெல்லாம்
உன் வீரம் பார்த்தோம் - நின்
நினைவாலே வாழ்ந்தோரின்
விழி நீரைச் சேர்த்தோம்
உன்னாலே தமிழ் வாழும்
என்று உன் பிரிவேற்றோம்
உயிர் தமிழுக்கு கொடுத்ததினை
கண்முன்னே கண்டோம்
ஓன்பதென்ன ;
நூறாண்டு போனாலும் என்ன
இதயத்தில் உன்நினைவை
என்னாலும் வைப்போம்.

- வேலணையூர் பாக்கியன் -

www.tamilarangam.net

# உயிரினும் மேலானது எமது உரிமை எமது சுதந்திரம் எமது கௌரவம்



**தியாகி திலீபன் மீளாத்துயில் அடைந்ததையிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் அப்போது வெளியிட்ட அறிக்கை, தமிழீழ மக்களுக்கு பல விடயங்களைத் தெளிவுபடுத்தியது. மக்களைப் போராட்டத்திற்கு அணிதிரள வைக்கும் அறைகூவலாக விளங்கியது. லெப். கேணல் திலீபனின் ஒன்பதாவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இவ் அறிக்கை இங்கு மீளப் பிரசுரமாகிறது.**

எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்து இருக்கின்றது. வீர காவியங்களைப் படைத்து இருக்கிறது. அர்ப்ப ணிப்புகளை செய்திருக்கிறது. இவை எல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீர சாதனைகள். ஆனால் என் அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது. வியக்கத்தக்கது. எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டக் களத்தில் தன்னைப் பலி கொடுத்து ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தை திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி. தமிழீழ தேசிய ஆன்மாவைத் தட்டி எழுப்பிய நிகழ்ச்சி. பாரத நாட்டைத் தலை குனிய வைத்த நிகழ்ச்சி. உலகின் மனச்சாட்சியை சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தம் என்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக மக்கள் எல்லோரையுமே எழுச்சி கொள்ளச் செய்த புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது. திலீபன் உங்களுக்காக இறந்தான். உங்கள் உரிமைக்காக இறந்தான். உங்கள் பாதுகாப்பிற்காக – உங்கள் சுதந்திரத்திற்காக – உங்கள் கௌரவத்திற்காக – இறந்தான். தான் நேசித்த மண்ணுக்காக – ஒருவன் எத்தகைய உயர்ந்த – உன்னதமான தியாகத்தை செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்திருக்கிறான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால், உயிரிலும் உன்னதமானது எமது உரிமை; எமது சுதந்திரம்; எமது கௌரவம்.



நான் திலீபனை ஆழமாக நேசித்தேன்; உறுதி வாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது எனக்கு அளவு கடந்த பாசம் உண்டு. அவன் துடிதுடித்துச் செத்துக் கொண்டிருக்கும் போதெல்லாம் என் ஆத்மா கலங்கும். ஆனால், நான் திலீபனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாக பார்க்கவில்லை. தன்னை எரித்துக் கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன். அதில் நான் பெருமை கொண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக் கட்டமான திலீபன் தன்னை அழித்துக் கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை. காலத்தால் சாகாத வரலாற்றுப் புருசனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

திலீபனின் மரணம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்து இருக்கிறது. இது அர்த்தமற்ற சாவு என இந்தியத் தூதுவர் கூறியிருக்கிறார். தமது உறுதி மொழிகளை நம்பியிருந்தால் திலீபன் உயிர் தப்பி இருப்பார் என்று சொல்லி இருக்கிறார். ஆனால் உண்மையில் நடந்தது என்ன? நடந்து கொண்டிருப்பது என்ன? என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

எமது உரிமைகள் வழங்கப்படும். எமது மக்களுக்கும் எமது மண்ணுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும். தமிழ் மக்கள் தமது பாரம்பரிய தாயகப் பூமியில் தம்மைத் தாமே ஆளும் வாய்ப்பு அளிக்கப்படும்.

இப்படியெல்லாம் பாரத அரசு எமக்கு அளித்த வாக்குறுதிகளை நம்பி நாம் எமது ஆயுதங்களைக் கையளித்தோம். எமது மக்களினதும் மண்ணினதும் பாதுகாப்பை இந்தியாவுக்குப் பொறுப்பளித்தோம்.

இதனை அடுத்து என்ன நடைபெற்றது என்பதெல்லாம் எமது மக்களாகிய உங்களுக்குத் தெரியும்.

தமிழ் அகதிகள் தமது சொந்த கிராமங்களுக்கு செல்ல முடியாது, முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்க, சிங்களக் குடியேற்றம் துரிதகதியில் தமிழ் மண்ணை கபளீகரம் செய்தது. சிங்கள அரசின் பொலிஸ் நிர்வாகம் தமிழ் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டது. அவசர அவசரமாக சிங்கள இனவாத அரச யந்திரம் தமிழ்ப் பகுதிகளில் ஊடுருவியது. சமாதான ஒப்பந்தம் என்ற போர்வையில் சமாதானப் படையின் அனுசரணையுடன் சிங்கள அரசு ஆதிக்கம் தமிழீழத்தில் நிலை கொள்ள முயன்றது.

இந்தப் பேராபத்தை உணர்ந்து கொண்ட திலீபன், இதற்கு ஏற்ற ஒரு முற்றுப்புள்ளி காண திடசங்கற்பம் கொண்டான். சிங்கள அரசுடன் உரிமை கோரிப் போராடுவதில் அர்த்தம் இல்லை. பாரதம் தான் எமது மக்களின் உரிமைக்கு உத்தரவாதம் அளித்தது. ஆகவே தான் பாரதம் எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது; எமது ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைத்தது. ஆகவே, பாரத அரசிடம் தான் நாம் உரிமை கோரிப் போராட வேண்டும். எனவேதான் பாரதத்துடன் தர்ம யுத்தம் ஒன்றைத் தொடுத்தான் திலீபன். அத்தோடு பாரதத்தின் ஆன்மீக மரபில் அகிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக் கொண்டான்.

நீராகாரம் கூட அருந்தாது மரண நோன்பை திலீபன் தழுவிக் கொள்வதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னரே நாம் இந்தியத் தூதுவர் திரு. டிக்சிட்டுக்கு முன்னறிவித்தல் கொடுத்தோம். உண்ணாவிரதம் ஆரம்பமாகி எட்டு நாட்கள் வரை ஒன்றும் நடைபெறவில்லை. பதிலுக்கு இந்திய அரசு ஆதிக்கத்தின் கீழுள்ள தொடர்பு சாதனங்கள், குறிப்பாக அகில இந்திய வானொலி எம்மீது விசமத்தனமான பொய்ப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டது. திலீபனின் உண்ணாவிரதத்தை மிகவும் கேவலமாகக் கொச்சைப்படுத்தியது. ஒன்பதாவது நாள், இந்தியத் தூதுவர் இங்கு வந்தார். உருப்படியில்லாத உறுதிமொழிகளைத் தந்தார்.

வெறும் உறுதிமொழிகளை நம்பி எமது இனம் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறது. உருப்படியான திட்டங்களை முன் வையுங்கள். எமது கோரிக்கைகளை நிறைவேற்றி வையுங்கள். அதுவரை உண்ணாவிரதம் கைவிடப்படமாட்டாது என்றேன். உங்களுக்கு திலீபனின் உயிரில் அக்கறை இருந்தால் நீங்கள் அவனை வந்து பாருங்கள். எமது மக்களுக்கு முன்பாக அவனிடம் உறுதிமொழிகளைக் கூறுங்கள். நான் உண்ணாவிரதத்தை வாபஸ் பெறுகிறோம் என்றேன். அதற்கு இந்தியத் தூதுவர் மறுத்து விட்டார்.

எனது அன்பான மக்களே! இந்திய அரசு எமது நியாயமான கோரிக்கைகளைப் புரிந்து காலம் தாழ்த்தாது உருப்படியான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் திலீபன் உயிர் பிழைத்து இருப்பான். இன்னமும் இந்திய அரசு எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் காலம் தாழ்த்தி வருகிறது. நாம் கேட்டுக் கொண்டபடி ஒரு இடைக்கால அரசை நிறுவி இன்று எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் சிரத்தை காட்டுவதை விடுத்து எமக்கு நிபந்தனைகளை விதிக்கிறது. எம்மோடு கலந்து ஆலோசிக்காத ஒரு ஒப்பந்தத்திற்கு எமது அங்கீகாரம் கேட்கிறது. இப்போது ஆயுதங்களை ஒப்படைப்பது பற்றிப் பேசுகிறது. போராட்டத்தைக் கைவிடச் சொல்கிறது.

நாம் உருப்படியான செயல்முறைத் திட்டங்களைக் கேட்க இந்தியா உறுதிமொழிகளைத் தருகிறது. நாம் விளக்கங்களைக் கேட்க இந்தியா கால அவகாசம் கேட்கிறது. நாம் கோரிக்கைகளை முன்வைக்க இந்தியா நிபந்தனைகளைப் போடுகிறது. இந்த சூழ்நிலையில் நாம் போராட்டத்தைக் கைவிட முடியாது. மாறாக, போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும். தமிழீழ மக்களின் ஒன்றுபட்ட தேசிய எழுச்சியாக எமது போராட்டம் புரட்சி வடிவம் பெற வேண்டும்.

முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் விடுதலைப் புலி வீரர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். வடக்கு – கிழக்கு அடங்கிலுமுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் புலிகள் முன்னெடுக்கும் இந்த சாத்வீகப் போராட்டத்தில் அணிதிரள வேண்டும். மக்களின் ஒன்று திரண்ட சக்தி மூலமே மக்களின் ஒருமுகப்பட்ட எழுச்சி மூலமே நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கலாம். திலீபனின் இணையற்ற தியாகத்திற்கு நாம் செய்யும் பங்களிப்பு இதுதான். ✷

www.tamilarangam.net



# யார் சர்வதேச போர்க் குற்றவாளிகள் ?

சிறிலங்கா அரசு, தமிழ் மக்களுக்கு உணவு மருந்துவ வழங்கல்களை படைப்பல பிரயோகத்தால் தடுப்பதன் மூலம் தமிழ் மக்களை போசாக் கற்றவர்களாகவும், பட்டினிச் சாவினை அவர்கள் மத்தியில் ஏற்படுத்தவும் மருந்தின்றி மரணங்கள் அதிகரிக்கவும் வழிசெய்து வருகின்றது. இவ்வகையான செயற்பாடுகள் சர்வதேச சட்டங்களைப் புறக்கணிப்பதுடன் மனித நேயத்திற்கு எதிரான பயங்கரக் குற்றமாகும்.



சட்டரீதியாக பார்க்கையில், 1968ஆம் ஆண்டு கார்த்திகை 26ஆம் திகதிய, ஐ.நா பொதுச் சபைத் தீர்மானப்படி, மனிதத்திற்கு எதிரான குற்றங்களை – அமைதியான நேரத்திலோ – போர்ச் சூழலிலோ –எந்த நேரத்தில் செய்தாலும் அத்தகைய குற்றச் செயல்களை செய்பவர்கள் யாராக இருந்தாலும் – கால எல்லை வரம்புகளுக்குள் உட்படாது, எந்நேரத்திலும் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டியவர்களாக உள்ளனர். இவ்வகையில், சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சரும் சனாதிபதியுமான சந்திரிகா, பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சருமான ரத்வத்தையும் சர்வதேச போர்க் குற்ற விசாரணையை இன்றில்லாவிட்டாலும், என்றோ ஒருநாள் எதிர்கொள்ள வேண்டிய சர்வதேசக் குற்றவாளிகளாக உள்ளனர்.

### சர்வதேச அமைதிக்கு - பாதுகாப்புக்கு குந்தகம்

மேலும், அமைதிக்கு எதிரான குற்றங்களும், ஐ.நா.வின் சாசனத்தின்படி சர்வதேச போர்க் குற்றச் செயலாகும். ஒரு மக்களின் அமைதி என்பது அபிவிருத்தி என்பதுடன் தொடர்பான தொன்று. அதனால் மக்களின் அபிவிருத்தியைத் திட்டமிட்டுத் தடை செய்யும் நடவடிக்கை எல்லாம் அமைதிக்கு எதிரான குற்றச் செயல்களாகக் கருதப்படும். இவ்வகையில்,

1) தமிழ் மக்களின் உட்கட்டுமானங்களை அழித்தல்.

2) தமிழ் மக்களின் சுய பொருண்மியத்தை நாசமாக்க - சுற்றாடல் மூல வளங்களை அழித்தல்,

3) அவர்களது மனித வலு மூளைப் பலம் என்பவற்றைச் சிதைக்க - தொழில் முயற்சிகளை அனுமதிக்காமல் - கல்வி அபிவிருத்தியைத் தடைசெய்தல்

போன்ற கொடிய செயல்களைச் செய்யும் சிறிலங்கா, அமைதிக்கு எதிரான குற்றச் செயல்களை பகிரங்கமாகச் செய்யும் அரசாகவும் உள்ளது. இதனால் அமைதிக்கு எதிரான குற்றச் செயல்களை செய்பவர்கள், சர்வதேச அமைதிக்கும் – பாதுகாப்புக்கும் குந்தகம் விளைவிக்கின்றார்கள் என்ற ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின்படி, சிறிலங்கா அரசு சர்வதேச அமைதிக்கும் – பாதுகாப்புக்கும் குந்தகம் விளைவிக்கும் செயலைச் செய்வதாகவும் உள்ளது.

அத்துடன், இன அழிப்பு என்பது சர்வதேசப் பயங்கரவாதச் செயல். அதனை திட்டமிட்டுத் தொடர்ந்தும் செய்யும் சிறிலங்கா, விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில், வான்–கடல்–தரை இராணுவ சுடுதிறன் பிரயோகங்கள் மூலமும், தனது கட்டுப்பாட்டில் உள்ள தமிழீழப் பகுதிகளில் காரணம் இல்லாக் கைதுகளும், இரகசியமாகத் தடுத்து வைத்தல் அல்லது கொலை செய்தல், சித்திரவதைகள், பகிரங்க போர் அச்சுறுத்தல்கள் மூலம் மக்களிடையே இனங்காணக் கூடிய அச்சத்தை விளைவித்தல், பெருந் தொகையாக மக்களை அடிக்கடி இடம்பெயரச் செய்தல் போன்ற வழிகள் மூலமும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

### சுதந்திரப் போராட்ட வீரர்களும் பயங்கரவாதமும்

இவ்வாறு அரச பயங்கரவாதத்தை தனது ஆட்சியாக தமிழர்களுக்கு வெளிப்படுத்தும் சிறிலங்கா, இதனை எதிர்த்து 1973ஆம் ஆண்டு ஐ.நா. சபையின் "சுதந்திரப் போராட்ட வீரர்கள்" பிரகடனத்திற்கேற்ப, தேசிய விடுதலை இயக்கமாக தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே மாற்றியமைத்த 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கமெனக் காட்ட முயல்கிறது.

விடுதலைப் புலிகளைத் தான் தடைசெய்யப் போவதாக ஒரு பொய் மிரட்டலையும் சிறிலங்கா அடிக்கடி கூறி வருகிறது. இவ்வாறு கூறுவதன்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்யும் உரிமை சிறிலங்கா அரசுக்கு சட்டப்படி இல்லை என்கிற உண்மையை மறைக்க முடியாது.

### அங்கீகாரம் வரை தொடரும்

தமிழீழ மக்கள் 1972ஆம் ஆண்டு முதல் நாடற்ற தேச மக்களாக மாற்றப்பட்டு விட்டதினால், தமது பாதுகாப்பை – அமைதியைத் தாமே உறுதிப்படுத்த வேண்டிய தேவையை – கடமையை விடுதலைப் புலிகள் இயக்கம் என்ற நிறுவன ரீதியான செயற்பாட்டின் மூலம் செய்கின்றனர். இதனை சர்வதேச உலகு அங்கீகரிக்கும் வரை இப்பிரச்சினை தொடருமே தவிர இதனை சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசு தடுப்பதற்கான எந்த சர்வதேசச் சட்ட உரிமையையும் கொண்டிருக்கவில்லை என்பதே உண்மை.

இதனால்தான் இலங்கைத் தீவில் போர் ஒன்று, தமிழ் - சிங்களத் தேச இனங்களுக்கிடையே நடைபெறுகின்றது என்ற உண்மையை உலகுக்கு முன் ஏற்க மறுக்கும் சிறிலங்கா, அதனை உள்நாட்டுப் பிரச்சினையாகக் காட்ட முனைகிறது.

### சர்வதேசப் பிரச்சினை

1995ஆம் ஆண்டின் ஸ்ரொக்கோம் சர்வதேச அமைதிக்கான ஆய்வு நிறுவனத்தின் (SIPRI) ஆண்டறிக்கையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை, சிறிலங்கா இராணுவ ரீதியில் முறியடிக்க முயல்வதினால், இந்தியாவின் பாதுகாப்புச் செலவீனமும் அதிகரிக்கிறது என்ற உண்மையை வெளியிட்டுள்ளது. ஒரு நாட்டினுள் நடைபெறும் விளைவால் இன்னொரு நாட்டின் பாதுகாப்புச் செலவீனம் அதிகரிக்க முடியாது. ஒரு சர்வதேசப் பிரச்சினையால் மட்டுமே இத்தகைய செலவினங்களை ஏற்படுத்த முடியும்.

மேலும் அமெரிக்க அரசின் சிறிலங் காவுக்கான நேரடி பயிற்சித் திட்டங்கள் சர்வதேச மட்டத்தில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளன.

வல்லாண்மை சக்திகளுக்கு இடையே மோதலை ஏற்படுத்தி தென்னாசியாவின் அமைதியையும், சர்வதேச அமைதியையும் –பாதுகாப்பையும். சீர்குலைப்பதற்கான பல செயல்கள் சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அகதிகள் பிரச்சினை – இந்தியா, ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா – போன்ற நாடுகளின் நிரந்தரப் பிரச்சினையாவதற்கு சிறிலங்காவின் நடவடிக்கைகளே காரணமாகின்றன.

இவ்விதமாக, சர்வதேசச் சட்டத்திலும் சிக்கலை ஏற்படுத்தும் சிறிலங்கா தனது தவறுகளை மறைக்க, பயங்கரவாத கோசத்தை எழுப்பி விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமாறு கோரிக்கையும் விடுக்கிறது.



ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கம் எதுவித சர்வதேச பயங்கரவாதத்திலும் ஈடுபடாத, சகல நாடுகளதும் சட்டங்களை மதித்துச் செயற்படும் தேசிய விடுதலை இயக்கமாகவே செயற்பட்டு வருகிறது. ஆகவே, விடுதலைப் புலிகளைத் தடை செய்தல் என்பதும் சர்வதேச சட்டங்களுக்கு முரணான ஒன்றாகவே உள்ளது.

### 220 கோடி பிரச்சார நிதி

சிறிலங்கா தனது வெளி நாட்டு தூதரகங்கள் மூலம் தனது உண்மைக்கு மாறான, விடுதலைப் புலிகள் பற்றியதும் – தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியதுமான செய்திகளைப் பரப்புவதற்கு – 220 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. தனது அபிவிருத்தி செயற்திட்டமாக இதனை சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது. இத்தோடு வெளிநாட்டுப் பிரதிநிதிகளை அழைத்துப் போலியான முறையில், அவர்களை மனோவசியம் செய்வதற்கு சிறிலங்காவின் ஏயர் லங்கா நிறுவனம் 25 மில்லியன் ரூபா விமானச் சீட்டுக்களை இலவசமாக வழங்க உள்ளதாகவும் அறிவித்துள்ளது.

### திட்டமிட்ட சதி

இவ்வாறாக, சிறிலங்கா திட்டமிட்ட வகையில் உலக நாடுகளின் அபிப்பிராயத்தை தன்பக்கம் திருப்பப் பல சதித் திட்டங்களை வகுத்து வருகிறது.

### இயக்க அங்கீகாரமே விடுதலை

இந்த இக்கட்டான நிலையில் தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளை 'சுதந்திரப் போராட்ட வீரர்கள்' 73 ஆண்டின் ஐ.நா. வரைவுக்குக் கீழ் அங்கீகரிப்பது ஒன்றே தமிழீழ மக்களின் உயிருக்கும் பாதுகாப்புக்கும் உலக நாடுகள் செய்யக் கூடிய ஏற்புடைய செயலாக உள்ளது.

அத்துடன், தமிழீழ மக்களுக்கான மனித நேய உதவிகளை சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசின் தலையீடு இன்றி நேரடியாக வழங்க முற்படுவது இக் கால கட்டத்தில் உலக நாடுகளின் பிரதான கடமையாகவும் மாறிவிடுகிறது.

## இராணுவத்தின் ஒழுக்கப் பிறழ்வு

"சிறிலங்கா இராணுவம் தனது ஒழுக்கம் கட்டுப்பாட்டால் தற்போது உலகளவிலான பெருமதிப்பைப் பெற்றுள்ளது. கடந்த காலம்போல் இல்லாமல் தற்போது வடக்கு – கிழக்கில் இருந்து எவ்விதமான பாலியல் வன்முறை மற்றும் கொலைச் செயல்களோ நடைபெற்ற செய்திகள் வரவில்லை. இதற்குக் காரணம் சரியான அரசியல் தலைமை" என வியாங்கொடையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 45வது நிறைவு தினத்தில் உரையாற்றிய சந்திரிகா, தன்னைத் தானே புகழ்ந்தும், வெளியுலகில் இராணுவத்தைப் பற்றி என்ன கருத்திருக்கிறது என்பதை சிங்கள மக்களுக்கு மூடி மறைத்தும் உள்ளார்.

அண்மையில் இலண்டன் சர்வதேச மன்னிப்புச் சபையினால் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் பற்றிய அறிக்கையில், சிறிலங்கா இராணுவம் யாழ். குடாநாட்டிலும், ஆக்கிரமித்துள்ள ஏனைய பிற பகுதிகளிலும் புரியும் பாலியல் வன்முறைகள், கொலைகள் பற்றித் தெரிவித்துள்ளது. அரசு செய்துள்ள செய்தித் தணிக்கையினால் இவைகள் வெளியே வருவது தடுக்கப்படுகிறது எனவும் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் கடந்த மாதம் 23ஆம் திகதி இலண்டன் பத்திரிகைகளின் தகவல்களின்படி, சிறிலங்காப் படையில் இருந்து தலைமறைவாகியவர்களில் 4076 பேரை பிடித்து மீண்டும் படையினர் எனும் பெயரில் சிறிலங்கா அரசு, யாழ். குடாநாட்டுக்குள் அனுப்பி வைத்துள்ளது. இவர்களே கொழும்பு உட்பட பல சிங்களப் பகுதிகளில் நடந்த பல கொலை, கொள்ளை மற்றும் கற்பழிப்புச் சம்பவங்களின் சூத்திர தாரிகளாக இருந்துள்ளனர். அத்துடன் 300 முன்னாள் சிறிலங்காப் படையினர் இத்தகைய குற்றச் செயல்களுக்காக தேடப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது. மொத்தம் 25,000க்கு மேற்பட்ட சிறிலங்காப் படையினர் படைகளை விட்டு விலகி ஒளிந்து வாழ்வதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

இத்தகைய கும்பலை தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பி, அங்கு ஓர் கொலை வெறிக் களத்தை உருவாக்கவே சிறிலங்கா அரசு இதனைத் திட்டமிட்டு செயற்படுத்தி வருகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறுகதை

# மறுமலர்வு

கனகபுரம் சிவாஞ்சலி

மாலை நேரம். மனம் அலைந்து, அலைந்து, குழம்பி எதையோ தேடியது. பிரச்சினைகள்...! நிறைய...! இழப்பு...!! எல்லாவற்றிலும் தான். மன அழுத்தம் உயர்ந்துகொண்டிருந்த வேளை கதிரையை விட்டெழுந்து என் தங்கையின்



சிறிய பூந்தோட்டத்தைச் சுற்றிப் பார்க்க நடந்தேன். ஒவ்வொரு பூங்கன்றையும் முற்றத்தில் சுற்றிப் பார்த்துக் கொண்டுவந்தபோது மனம் பிரச்சினைகளிலும், நடக்கப்போகும் பரீட்சையிலும் மாறி மாறி நின்றது. இந்தப் பல்கலைக்கழகப் பரீட்சை நடக்குமோ? நடக்காதோ? நோட்சுகளை நினைத்தால்....? திருநெல்வேலி 'றூம்'இல் விட்டு விட்டு வந்த 'நோட்சும்', 'கல்குலேட்டரும்', உடுப்பும், எல்லா வற்றிற்கும் மேலாய் என் புத்தம் புது 'லுமாலா' சைக்கிளும், இன்னும்...! இன்னும்...! சீக்...! நிம்மதியே இல்லை. கல்லைக் கண்டால் நாயைக் காணோம். நாயைக் கண்டால்...! முருகிக்

> இடம்பெயர்ந்தால் நிச்சயம் வாட்டம் வரும். அது அழிய வேண்டுமென்றே பிரட்டின னாங்கள்? இன்னும் வளர வேண்டும். இந்த மரத்தின் அழகான அந்தப் பூக்களைப் பார்க்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் தானே பிரட்டினாங்கள்.

கொண்டிருந்த என் மனத்துடன், திடீரென என் பார்வை அந்த பூக்கன்றில் பதிந்தது. ஏதோ தேடிய ஒன்று கிடைத்த மாதிரி, ஓர் ஆறுதல், அந்தப் பூங்கன்றின் பெயர்கூட எனக்குத் தெரியாது. ஆனால் அது அழகான பூக்களை, அதுவும் றம்புட்டான் பழம் போன்ற பூக்களைப் பூக்குமாம். ஓ......

. . .

1995 – பல்கலைக்கழக ஆண்டிறுதிப் பரீட்சைக்காக ஆயத்த விடுமுறை காலத்தில் என் அக்காவின் திருமண நிகழ்வுக்காக கிளிநொச்சிக்கு வந்திருந்தேன். அது ஐப்பசி மாதம். மாரி காலத்தின் ஆரம்ப நாட்கள். நான் வந்த இரு நாட்களில் திருமண நிகழ்வு நடக்க இருந்தது. அடுத்த நாள் மாலை, பந்தல் போடுவதற்காக அம்மாவும், நானும் முற்றத்தை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தோம். வீட்டின் சுவரோரங்களில் உள்ள பூம்பாத்திகளில் ரோசாவும் மல்லிகையும் கனகாம்பரமும் சில குரோட்டன்களும் அழகாக வளர்ந்திருந்தன. அவற்றோடு புதுவித செடிகள் பலவும் வளர்ந்து கொண்டிருந்தன. புதுச்செடிகளின் விபரம் அறிய அம்மாவிடம் கேட்டேன். "இதென்னம்மா, கனக்க செடியள் புதுசா இருக்கு என்ன செடி?" "இதை யென்ன கேட்கிறாய். உன்ர தம்பிக்கு வேற வேலையில்லை. பள்ளிக்கூட பெடியள் குடுக்கிற காட்டு விதைகளை எல்லாம் இதுக்குள்ளதான் போடுறது. அதுகளும் பேர், ஊர் தெரியாமல் தன்ர பாட்டில வளர்ந்திருக்கு இதுகளை என்னத்துக்கு இதுக்குள்ள, கோணல், மாணலாய்........" சொல்லிக்கொண்டே, அம்மா அவற்றை பிடிங்கிப் புல்லோடு சேர்க்கத் தொடங்கினார். எனக்குப் புரிந்தது. தம்பி ஏதோ நல்ல பூங்கன்று என்றுதான் விதைகள் போட்டிருப்பான். எனவே நான் அம்மாவிடம் அவசரமாகச் சொன்னேன். "எணே! அந்த இரண்டு செடியையும் விடண, வளரட்டும் பார்ப்பம் என்ன பூவென்று" சுவரோடு அண்டி நின்ற இருசெடிகள் அம்மாவின் அழித்தலில் இருந்து விடுபட்டன.

அதன் பிறகு அடுத்தடுத்த நாட்களில் அக்காவின் திருமணம் கோலாகலமாக நடந்தது. வீட்டில் எல்லோரும் ஏதோ ஓர் திருப்தியில் இருந்தார்கள். நானும் அந்தப் பூங்கன்றை மறந்துபோனேன். கடல் ஊருக்குள் வந்தது போல நதி பெருக்கெடுத்தது மாதிரி சனங்கள் இடம்பெயர்ந்து வந்தார்கள். யாழ்ப்பாணம் அழிகின்றது என்ற பேச்சே எங்கும். 'என்னுடைய 'றூம்', எப்படியாய் இருக்கும்? 'நோட்ஸ்', உடுப்புக்கள், எழுதிய குறிப்புக்கள், கவிதைகள், புகைப்படங்கள், நண்பர்களின் கடிதங்கள்...... சைக்கிள், பல்கலைக் கழகத்தில் கிடைத்த வெற்றிச் சான்றிதழ்கள்.... ஆவணங்கள்.... நண்பர்கள், பழகியவர்கள் எல்லாச்சனமும் எவ்வளவை விட்டுட்டு இப்படி அந்தரப்பட்டு அலையுதுகள். அந்நேரத்தில் வன்னியில் இருந்து நான் தவித்துக்கொண்டிருந்தேன் – எனது பொருட்களையும் நான் இருந்த வீட்டுக்காரரையும் காண்பதற்கு – எனினும் என்னால் மீண்டும் யாழ்ப்பாணத்தையோ, கிளாலியையோ

> குருத்துக்கள் அப்படியே இரண்டாக மடிந்து தொங்கின. இலைகள் கருகி சருகாகின. எனினும் இறுதியில் சில இலைகள் இருந்துகொண்டிருந்தன. அவை சருகாகும் வேகம் குறைந்து இலைகளின் நடுவே ஓர் குளம்போல் பச்சை நிறத்தன்மை...


பார்க்க முடியாது போனது உண்மை.

திருமணக்களை முடியும் முன்பே வலிகாம இடப்பெயர்வால் பல உறவுக் குடும்பங்கள் எம் வீட்டில் தங்கின. குழந்தைகள், முதியோர், பெண்கள், விடலைகள்.... ஒரே சத்தம். வீட்டின் ஒவ்வொரு பகுதியும் மனித ஸ்பரிசத்தால் உணர்ச்சிவசப்பட்டுக் கொண்டிருந்தது.

எங்களுடைய பெரிய காணியில் ஆங்காங்கே பல கொட்டில்கள் சில நாட்களிலேயே உருவாகின. இடம் பெயர்ந்தவர்களுக்கு உதவிகள் செய்வதிலும், இங்குள்ள பொருண்மிய இயக்க அலுவலகங்கள் தொடக்கம் கச்சேரி, மருத்துவமனை, கோவில்வரை அறிமுகப்படுத்தி இனம்காட்டிக் கொடுப்பதில் நான் உதவிக் கொண்டிருந்தேன். இந்த இடைக் காலத்தில் அதே றம்புட்டான் பூச்செடி (ஆம், அதற்கு அப்படித்தான் நான் பெயர் வைத்தேன்.) அவற்றில் ஒன்று மட்டும் தன்னை தனியே இனங்காட்டக்கூடிய அளவிற்கு சுமார் இரண்டு மீற்றர் உயரத்திற்கு வளர்ந்துவிட்டிருந்தது. அதனோடு நின்ற மற்றையது வந்திருந்த விடலைகளால் விளையாடப் பட்டிருக்கலாம். அல்லது வளரக்கூடிய சக்தி ஏதோ ஒன்றை இழந்திருக்கலாம். அதனால் அதனைக் காணவில்லை. இப்போது வளர்ந்துவிட்ட இந்த செடி பற்றி கவலைகொள்ள எவருமில்லை. நானும் என் வேலைகளும் சிந்தனையுமாய்த் திரிந்தேன்.

சில நாட்களின் பின் ஒரு வியாழக்கிழமை காலையில் தந்தையிடம் ஏதோ அலுவலாய் ஒருவர் வந்தார். வந்தவர் எமக்கு அறிமுகம் இல்லாதவர். அதனால் தந்தையாருக்கு வரவை அறிவித்துவிட்டு நான் முற்றத்தை கூட்டித் துப்பரவாக்கிக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் வந்தவர் அலுவல் முடிந்து போகும்போது சுவரோரம் பூத்திருந்த ரோஜாச் செடிக்கு அருகில் எனது 'றம்புட்டான்' செடியைக் கண்டு விட்டார். அந்தப் பூச்செடிபற்றி அவருக்கு நிறையத் தெரிந்திருக்க வேண்டும். அதன் உண்மையான பெயரையும் சொன்னார். நான் அப்பவும் அப்பெயரைக் கவனத்தில் எடுக்கவில்லை. கூட்டிப் பெருக்குவதிலேயே அக்கறையாய் இருந்தேன். ஆனால் "இது 'றம்புட்டான்' பழம் மாதிரிப் பூப்பூக்கும். இது நல்ல பூ மரம். வடிவாக இருக்கும்." என்ற அவரின் விமர்சனம் மட்டும் நினைவில் நின்றது. மீண்டும் ஏதோ நினைத்துவிட்டு ஐயாவிடம் சொன்னார், "அண்ணை இந்தப் பூக்கண்டு பெரிசாய் வளரும். உது சுவரோடு நிக்கிறது நல்லதில்லை. இடிச்சுப் பிரிச்சுக்கொண்டு வளரும். நீங்கள் அங்காலை அந்த இடத்தில இதை சுதந்திரமாய் நட்டுவிடுங்கோ. கொஞ்சந்தான் வளந்திருக்கு. இப்பவே பிடுங்கினால் ஓரளவு தப்பும். நல்ல பூக்கண்டண்ணை, இதை நான் தேடாத இடம் இல்லை. எப்படியாவது நானும் ஒரு பூங்கன்று எடுக்க வேணும்" என்று வலு உற்சாகமாகக் கூறிக் கொண்டிருந்தார். இந்த சம்பாசணையை முக்கால்வாசியும் நான் கிரகித்துக் கொண்டேன். எங்கட ஐயாவுக்கு பூக்கன்று, பொழுதுபோக்கு இதில் எல்லாம் நாட்டம் இல்லை. இதற்குப் பதில் இரண்டு கத்தரி வைத்து தண்ணீர் ஊற்றலாம் என்பார். எனவே வந்தவரின் விவரணத்தை வேண்டாவெறுப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தார். இந்தப் பூக்கன்றுக் கதையைக் கேட்டு அம்மா உட்பட தங்கைகளும் தம்பிமாரும் ஆவலோடு வெளியே வந்தனர். வந்தவர் சொன்ன சகல விவரங்களையும் குசினிக்குள் இருந்து உள் வாங்கிக்கொண்டிருந்த அம்மா இல்லத் தம்பி உது கனக்க முளைச்சிருந்தது. பெரியவளின் கலியாண வீட்டோடு கனக்கப் பிடுங்கிப்போட்டன். என்ரை சின்னவன்தான் ஏதோ விதையள் போட்டவன். அதிலதான் இது முளைத்தது. எங்களுக்குத் தெரியாது இது உப்பிடியான பூப்பூக்கும் மரம் என்று" அம்மா ஆதங்கப்பட்டுக் கூறிக்கொண்டிருந்தார்.

"இல்லை அக்கா, இப்ப பிடுங்கி வேறு இடத்தில நட்டுப் பாருங்கோ வந்தாலும்



வரும்" வந்தவர் விடைபெற்றுக்கொண்டு போனார்.

பெரிய தங்கைக்கு ஆசை வந்திட்டுது. "அக்கா உதைப் பிரட்டினால் வாடிப்போகுமெல்லே. பெரிசாயும் வளந்திட்டுது. வேரெல்லாம் அறுபட்டிடும்" கவலைப்பட்டுக்கொண்டாள்.

விதைபோட்ட சின்னத் தம்பி உடனேயே

தொடர்ச்சி 12ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளை வழங்கிய விடுதலைக் கானம்பாடி - 1996

யேர்மனியின் எசன் நகரில் சிறந்த விடுதலைப் பாடகர் தெரிவுப் போட்டியை தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளை நடாத்தியது.

14-09-96 அன்று நடைபெற்ற இந் நிகழ்வு, மண்டபம் நிறைந்த மக்களுடனும் மிகவும் திறமையான முறையிலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

மேற்பிரிவு ஆண்கள், மேற்பிரிவு பெண்கள், இணை குரல், கீழ்ப்பிரிவு என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடாத்தப்பட்டன. நடுவர்களாக லண்டனில் இருந்து மாதினி சிறிஸ் கந்தராஜா, நாகேஸ்வரி பிரமானந்தா ஆகியோரும் பாரிசில் இருந்து செல்வி குமுதினி அவர்களும் கலந்து பணியாற்றினர்.

இடையிடையே நகைச்சுவை வேளையை விகட விற்பனர் ஐசாக் இன்பராஜா அவர்கள் வழங்கினார்.

முதற் பரிசுகள் புனர்வாழ்வுக் கழகச் சின்னம் பொறித்த தங்கப் பதக்கத்துடன் கானம் பாடி இசைப்பாடகர் பட்டயமும் இரண்டாம் மூன்றாம் பரிசுகளாக பட்டயமும் வழங்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் ஆனந்தராஜா அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

"இந்த நிகழ்ச்சி, பாடுகிற நிகழ்ச்சியாக மட்டும் இல்லாமல் பாடிக்கொண்டே சொண்டுகளில் நெற்கதிர்களை தூக்கிச் சென்று சிறகெறிந்து போன தமிழீழத்தின் சொந்தப் பறவைகளுக்கு ஊட்டி மகிழும் கானம்பாடி நிகழ்ச்சி" என கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் குறிப்பிட்டுப் பேசினார்.

கலை பண்பாடுக் கழக நடன மணிகள் ஒரு விடுதலைக் கீத நடனத்தை வழங்கினர். மிகச் சிறந்த பாடகர் போட்டியாக இது அமைந்ததாக நடுவர்கள் குறிப்பிட்டனர். தமிழீழம் இசைக்குழுவினர் நீண்ட காலமாக புனர்வாழ்வுக் கழகத்திற்கு செய்துவரும் பணியைப் பாராட்டிப் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சிக்கும் பின்னணி இசையை தமிழீழம் இசைக் குழுவே அமைத்திருந்தது. ✷

# ஆக்கிரமிப்புப் பகுதிக்குள்...

குடும்பங்கள் தொழில் வாய்ப்பை இழந்து பட்டினி, மற்றும் உணவுச் சத்தின்மை நிலைக்கும் ஆளாகியுள்ளனர். பசிக் கொடுமை தாங்காமல் கரை வலைக்குப் போகும் மீனவர்கள் படையினரின் மிருகத்தனமான தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

### அரசின் போர்ச் செலவுக்கேற்ற விலைகள் படுவேக அதிகரிப்பு

"தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நிலமை வழமைக்குத் திரும்புகிறது. மக்கள் பொருட்களை இலகுவாகவும் நியாயமான விலையிலும் பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது" என சிறிலங்கா அரச தரப்பு உலகிற்கு எவ்வளவு பிரச்சாரம் செய்தாலும், உண்மை நிலை தலைகீழாகவே காணப்படுகிறது. ஒரு இறாத்தல் பாண் வாங்க 5 மைல்களுக்கு செல்ல வேண்டியுள்ளதும், ஒரு குடும்பத்திற்கு ஒரு இறாத்தல் பாண் எனவும் பல கட்டுப்பாடுகள் இராணுவத்தால் விதிக்கப்படுகிறது. அத்துடன் பொருட்களின் விலையோ, சந்திரிகா அரசின் போர்ச் செலவுக்கேற்ப அதிகரிக்கிறது.

கொழும்பில் 20 ரூபாவான 1 கிலோ மாவு யாழ். குடாநாட்டில் 100 ரூபாவாகவும், இறைச்சி கொழும்பில் 100 ரூபாவாகவும் யாழ். குடாநாட்டில் 180 ரூபா, முட்டை 15 ரூபாவாகவும் விற்கப்படுகிறது. சீனி, மண்ணெண்ணெய்க்கு பெருத்த தட்டுப்பாடு நிலவுகிறது. பல கள்ளச் சந்தைகளையும் இராணுவம் ஊக்குவித்து வருகிறதாம். இதன்மூலம் பெருந்தொகைப் பணம் அவர்களுக்கு ஆதாயமாகக் கிடைப்பதாகவும் தெரிய வருகிறது. ✷

# மறுமலர்வு...

மண்வெட்டியுடன் வந்தான். நானும் விளக்குமாற்றை வைத்து விட்டு தம்பிக்கு உதவத் தீர்மானமாய் இறங்கினேன். அம்மா பேசத் தொடங்கினா– "டேய் பிரட்டாதையடா! உதிலயெண்டாலும் உயிரோட நிக்கும் பிரட்டி வைக்கப் பட்டெல்ல போகும். அதோடை இண்டைக்கு வியாழக்கிழமையும், என்ன த்தையாவது செய்யுங்கோ" மனமின்றிய அம்மாவின் கவலை அரைவாசி சரியாயும் மிகுதி சிரிப்பாயும் இருந்தது. எனினும் நான் சொன்னேன் "அம்மா, இது இதில நிண்டு வளர்ந்தா பெரிசா வளரும் – அப்பிடி வளர்ந்தா வீட்டுக்கும் மரத்துக்கும் ஒன்றுக்கொன்று இடைஞ்சலா இருக்கும் – அதோட இது தனிமரமாய்த்தான் வளர வேணும். கொப்புக் கிளைவிட்டு பெரிசாத்தான் வளருமாம் பிறகேன். இதில இருக்கிறதெண்டா எந்த வில்லங்களும் இல்லாமல் சுதந்திர மாக இருக்க வேண்டும். இல்லாட்டி அழித்திடோணும். நீ பிரட்டடா தம்பி". எனது உத்தரவை அடுத்து சின்னவன் ஓங்கி வெட்டினான். "உனக்கு 'லோ'த்தான் கதைக்கத் தெரியும். கள்ள வியாழனில கழுத்த வெட்டுங்கோ" ஆற்றாமையுடன் அம்மா, அடுப்படி தாண்டிப் போய்க்கொண்டிருந்தார்.

அம்மாவைத் தொடர்ந்து பெரிய தங்கையும் "உது வராது பார். வீணாய் இவ்வளவு நாளும் வளர்ந்ததுதான் மிச்சம்" என்று புறுபுறுத்துக்கொண்டே போய் விட்டாள்.

நானும் தம்பியும் பூக்கன்றைப் பிரட்டிவிட்டோம். மண்ணோடு அள்ளியதில் வேர் அறுபட்டுதோ இல்லையோ தெரியவில்லை. பெரும்பாலும் பக்கவேர்களே சேதமாகி இருக்கும் என்ற நம்பிக்கையும், ஆறுதலும் எனக்கு. பூக்கன்றை நான் கையில் வைத்திருக்க அதைப் பார்த்தபோது எனக்குள் பலவிதமான உணர்வுகள்..... எனினும் இன்னும் நம்பிக்கை சாயவில்லை. அதற்கிடையில் தம்பி முற்றத்தின் மறுகோடியில் ஒரு இடத்தில் குழி தோண்டிவிட்டான் அதில் கொஞ்சம் எருவும் போட்டு இருவருமாக நட்டுவிட்டோம். களைத்திருக்கும் என தண்ணீரும் ஊற்றி வெய்யிலுக்கு நிழலாக பூவரசம் கொப்புகளும் ஊன்றி விட்டோம்.

அதன் பின் ஒவ்வொரு நாளும் தண்ணீர் ஊற்றி ஏதோ ஓர் எதிர்பார்ப்புடன் ஒவ்வொருவரும் அக்கறையாய் பராமரித்தோம். ஆனால் இரண்டு நாட்களின்பின் செடியில் இருந்த இலைகள் வாடி சருகாகத் தொடங்க, குருத்துக்கள் கண்முன்னே மடியத்தொடங்கின.

இது எதிர்பார்த்ததுதான். எனினும் யதார்த்தத்தைத் தாங்க முடியவில்லை. வீட்டில் எல்லோருக்கும் கவலை. "சீ அநியாயமாப் போட்டுது. என்னமாதிரி இருந்தது, இரண்டு லூசுக்கும் சொல்லச் சொல்ல பிரட்டி நட்டதுகள். இப்ப பாரன்" பெரிய தங்கை எப்பவோ எடுத்த தன் தீர்மானம் நிறைவேறி வருவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். ஆனால், எனக்குள் இன்றும் அதே நம்பிக்கை. இது நிச்சயம் உய்யும். ஒருமுறை இப்படி நிகழுந்தான். இடம்பெயர்ந்தால் நிச்சயம் வாட்டம் வரும். அது அழிய வேண்டுமென்றே பிரட்டினனாங்கள்? இன்னும் வளர வேண்டும். இந்த மரத்தின் அழகான அந்தப் பூக்களைப் பார்க்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் தானே பிரட்டினாங்கள். எனக்குள் எழுந்த இந்தச் சிந்தனையை சின்னத் தம்பியும் ஆமோதித்தான். இதனால் என் நம்பிக்கை இன்னும் வளர்ந்தது.

இந்நிலையில், படிப்படியாக வீட்டில் உள்ளவர்களினதும் அக்கறை இதிலிருந்து குறைந்தது. ஆனால் நான் என் நம்பிக்கைக்கு நீர் வார்ப்பதுபோல் ஒவ்வொரு நாளும் இரண்டு வேளையும் அந்த மரத்தோடு மானசீகமாய்க் கதைப்பேன். சில தாவரவியல் ஆய்வில் பூமரத்தோடு அல்லது ஒரு செடியோடு நாம் அன்பாக வருடிக்கொடுத்து மானசீகமாய்க் கதைத்தால் அது நன்றாக வளர்ந்து சிறந்த பலனைக் கொடுக்கும் என நிரூபித்திருக்கின்றார்கள். இக்கருத்தில் நானும் அனுபவபூர்வமாய் பரிசோதித்து உடன்பட்டிருந்தேன். எனவே என் றம்புட்டான் செடியின் கருகிப் போய்க்கொண்டிருந்த இலைகளைத் தடவி என்னால் முடிந்தளவு அன்புடன் பராமரித்தேன். தண்ணீர் ஊற்றும்போது மரம் முழுவதும் படுமாறு தெளித்தேன். எனினும் குருத்துக்கள் அப்படியே இரண்டாக மடிந்து தொங்கின. இலைகள் கருகி சருகாகின. எனினும் இறுதியில் சில இலைகள் இருந்துகொண்டிருந்தன. அவை சருகாகும் வேகம் குறைந்து இலைகளின் நடுவே ஓர் குளம்போல் பச்சை நிறத்தன்மை காணப்பட்டது. இதனால் நான் அடுத்த மாற்றத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன்.

இரண்டு நாட்களின் பின் ஒரு நாள் சில அரும்புகள் மிக நுண்ணிய அளவுகளில் துளிர்த்திருந்ததை நான் கண்டேன். எனக்கு மகிழ்ச்சியோ பிடிபடவில்லை. எல்லோரையும் உரக்கக்கூவி அழைத்தேன். அம்மாவுக்கு சாகக் கிடந்த பிள்ளை உயிர் தப்பிய சந்தோசம். பெரிய தங்கையின் முகத்திலோ மகிழ்ச்சி குமிழியிட்டிருந்தது. தம்பிக்கும் எனக்கும் ஒரு சரித்திர வெற்றி. மொத்தத்தில் எல்லோருக்கும் மகிழ்ச்சியே. எனது துக்கம், சோகம், ஏக்கம் எல்லாம் எங்கோ ஓடின. இவ்வேளை, குளிரென என் பாதங்களில் தண்ணீரின் ஸ்பரிசம் பட்டது. என் சிந்தனை அறுபட என் எதிரில் நின்று றம்புட்டான் பூக்கன்றுக்கு தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தாள் பெரிய தங்கை. "என்னக்கா இன்னும் பூக்கண்டோடை கதைக்கிறியே. அதுதான் இப்ப பத்து இலைகளும் வைச்சு பளீரென நிக்குது பிறகென்ன" சொல்லிக்கொண்டே அவள் அடுத்த மரங்களுக்கு நீர் வார்க்க நகர்ந்து போனாள்.

இடம் மாற்றி நட்டபோது றம்புட்டான் பூக்கண்டின் கொழுந்துகள் கண் முன்னே எரிந்து விழுந்தனதான். எனினும், அது அப்படியே தொங்கிக் கொண்டும் விழுந்து கொண்டும் இருக்க புதிய கொழுந்துகள் புத்துணர்வுடன் எழுந்திருந்தன. அந்தக் கொழுந்துகளின் முடிவில் நான் இதுவரையும் காணாத அனுபவித்திராத ஆவலோடு எதிர்நோக்குகின்ற அந்த அழகான றம்புட்டான் பூக்கள் மனக்கண்ணில் மலரத் தொடங்கின. ✷

# தாயகம் நோக்கிய ...

மொசாட் அலியா பெற்றின் இன்னொரு திறமையான செயல் வீரனாக ஜோஆப் விளங்கினான். முன்னிருபதுகளில் வயதைக் கொண்டிருந்த ஜோஆப், அரபு நாட்டு விடயங்கள் பற்றி மிகவும் கூரிய அறிவைக் கொண்டிருந்தான்.

முதலிலிருந்தே, மொசாட்டில் இருந்தவர்களில், யார்கோனி மிகுந்த தீரமும் செயற்திறமையும் கொண்டவனாக விளங்கினான். பேரீச்சை மரங்களை வளர்க்கும் தொழிலில் பலஸ்தீனியர்களை ஈடுபட வைத்தது அவனுடைய முக்கிய செயற்பாடுகளில் ஒன்றாகும். ஈராக்கிய அரபுக்கள் தங்கள் பேரீச்சை மரங்களை மிகவும் தீவிரமாக பாதுகாத்து வளர்த்து வந்தார்கள். ஆயினும் நூறு பேரீச்சைக் கன்றுகளை ஈராக்கிலிருந்து ஜோஆப் கடத்தி வந்தான்.

கராஒலொஸ்ஸிலேயே, சிறுவர்கள் தங்கி இருந்த முகாம் முக்கியமான இடமாக இருந்ததால் அதன் கட்டுப்பாட்டை டேவிட் பென் அமி, யார்க்கோனியிடம் ஒப்படைத்திருந்தான்.

பச்சைக் குழந்தையிலிருந்து, பதினேழு வயது வரையிலான அனாதைப் பிள்ளைகளைக் கொண்டிருந்த முகாமை ஜோஆப், அரிக்குச் சுற்றிக் காட்டினான். இவர்களில் அதிகமானோர் போரின்போது சித்திரவதைத் தடுப்பு முகாங்களில் இருந்ததோடு, அநேகருக்கு முட்கம்பி வேலிக்கு வெளியே என்ன இருக்கிறதென்றே தெரியாது. மற்றைய பிரிவுகளை விட, இங்கு சில நிரந்தரமான கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இங்கு ஒரு பாடசாலை, உணவருந்துமிடம், வைத்தியசாலை ஆகியன சிறிய அளவுகளிலும், ஒரு விளையாட்டு மைதானம் பெரியளவிலும் அமைக்கப்பட்டிருந்தன. மற்றைய இடங்களில் காணப்பட்ட சோம்பல்தனத்திற்கு மாறாக, இங்கு உற்சாகமான முறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தன. மருத்துவ வசதிகள், வைத்தியர்கள், ஆசிரியர்கள், நலன்புரி வேலை செய்வோர் ஆகியோர் அமெரிக்க யூதர்களின் நிதி உதவியால் இங்கு கடமையிலீடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

இப்படியாக, வெளியாட்கள் இங்கு தொகையாக உள் வருவதால், இங்கு கராஒலொஸ்ஸிலேயே காவல் குறைவாயிருந்த நிலைமையைப் பயன்படுத்தி ஜோஆப்பும், டேவிட்டும் பால்மாக் தலைமையகத்தை இங்கே விரைவாக நிறுவிக்கொண்டார்கள். இரவில் விளையாட்டு மைதானமானது, யூதர்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுக்கும் இடமாக மாறியது. வகுப்பறைகள் எல்லாம் வழமையான கல்விமுறையைக் கற்பிக்கும் இடத்திலிருந்து, அராபிய மனநிலைகள், பலஸ்தீன புவியியல் அமைப்பு, உத்திகள், ஆயுதங்களை அடையாளங் காணுதல், மற்றும் நூற்றுக்கணக்கான போர்முறைகளைப் பல்வேறு மட்டங்களில் பயிற்றுவிக்கும் நிலையங்களாக மாறின.

பால்மாக்கிடமிருந்து இராணுவப் பயிற்சி பெறும் ஒவ்வொரு அகதியும், ஒரு தற்காலிக நீதிமன்று ஒன்றில் விசாரணை ஒன்றுக்கு முகம் கொடுக்க வேண்டும். இங்கு, இந்த அகதி, பலஸ்தீனத்துக்குள் போன பிறகு பிரிட்டிஷாரிடம் அகப்பட்டு விட்டதாகப் பாவனை செய்யப்படும். பால்மாக்கின் போதனாசிரியர், இவர்களை, சட்டவிரோதமாகப் பலஸ்தீனத்திற்குள் வந்தவர்கள் என்று நிரூபிப்பதுபோல் கேள்விகளைக் கேட்பார்.

தொடரும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்




## முதலாம் பாகம்

### அத்தியாயம் எட்டு

பிரிகேடியர் புரூஸ் சுதர்லாண்ட், இம்சைக்குள்ளாக்கப்பட்ட, சபிக்கப்பட்ட மனிதரைப் போன்று நித்திரை கொண்டார். சைப்பிரசுக்காரனான மண்ட்றியா புரண்டு புரண்டு படுத்தாலும், ஒரு உற்சாகமான நித்திரையிலாழ்ந்திருந்தான்.

மார்க் பார்க்கர், ஒரு பணியை முடித்தவனுடையதைப் போன்ற நித்திரையிலிருந்தான். வருடக்கணக்காகத் தான் கண்டிராத மன நிம்மதியோடு கிற்றி பிறமென்ற் துயில் கொண்டாள். ஜோர்டானாவின் கடிதத்தை மனப் பாடமாக்குமளவிற்குப் பலமுறை வாசித்த பின்பே டேவிட் பென் அமி நித்திரை கொண்டார்.

அரி பென் அமி தூங்கவேயில்லை. அச் சுகபோகத்தை அனுபவிக்க வேறு நேரங்கள் உண்டு. இப்போது தேவை யில்லை. எவ்வளவோ குறுகிய நேரத்தில் எவ்வளவோ அதிகமாகத் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. இரவு முழுவதுமே அவன், வரைபடங்கள், ஆவணங்கள், செய்தித்தாள்கள் போன்றவற்றில் மூழ்கி, சைப்பிரசைப் பற்றிய ஒவ்வொரு விடயத்தையும் உணரத் தலைப்பட்டான். பிரிட்டிசாரின் நடவடிக்கைகள், தனது சொந்த மக்கள் எல்லாவற்றைப் பற்றியுமே அறியத் தலைப்பட்டான். இந்தத் தரவுகளை, ஒன்றில் தொடர்ச்சியாக சிகரெட் ஊதியபடி, அல்லது கோப்பிக் கோப்பைகளைக் காலி செய்தபடி ஆராய்ந்து சென்றான். எந்த வேலையையும் இலகுவாகச் செய்யும் துணிவைப் பெறப்படும் அமைதியும், நிச்சயமான தன்மையும் அவனைச் சூழ்ந்திருந்தன.

தகவல் சேகரிப்பு ஆய்வுத் துறையில் எவருக்கும் சமமான திறமைகளைப் பலஸ்தீன யூதர்கள் கொண்டிருந்தார்கள் என்பது பிரிட்டிசாரே பலமுறை ஒத்துக்கொண்ட விடயமாகும். எந்தவொரு நாட்டில் இருக்கும் எந்தவொரு யூதனும் மொசாட் அலியா பெற் ஒற்றன் ஒருவனுக்குத் தகவல்களைச் சேகரிக்கும் மூலங்களாகப் பயன்படுத்தக் கூடியதாக இருந்ததோடு, அவர்களுக்குப் பாதுகாப்பளிப்பவர்களாகவும் இருந்தார்கள்.

பொழுது புலர்ந்த கையோடு டேவிட்டை எழுப்பிய அரி விரைவாகக் காலையுணவை முடித்துக் கொண்டு, மண்ட்றியாவின் ரக்சி ஒன்றில் கராஒலொஸ் தடுப்பு முகாம்களை நோக்கிச் சென்றான்.

பாமாகுஸ்ராவுக்கும், சலாமிஸ் சிதைவுகட்கும் இடைநடுவில் குடாவை அண்டியபடி பல மைல் தூரத்துக்கு அந்த வளாகங்கள் பரந்திருந்தன. கழிவுகளைப் போடுமிடங்கள், அகதிகளும் சைப்பிரசு வாசிகளும் தொடர்பு கொள்ளுமிடமாக விளங்கின. பிரிட்டிஷார் கழிவு இடங்களை மிக இலேசாகவே காவல்காத்து வந்தனர். ஏனெனில் இங்குள்ள காவல் கடமைகளில் அவர்க ளுக்கு நம்பிக்கைக்குரிய வர்களே ஈடுபடுத்தப்பட்டனர். இந்த இடங்கள் முகாம்களில் செய்யப்பட்ட தோல் பொருட்க ளையும், கலைப் பொருட்க ளையும், பாணுக்கும் உடுபுடை வைகளுக்குமாகப் பண்டமாற்று செய்து கொள்ளும் வர்த்தக நிலையங்களாக விளங்கின.

அதிகாலை வேளை வியாபாரம் நடைபெறத் தொடங்கிவிட்டது. கழிவக ற்றும் இடங்களூடாக டேவிட், அரியை உள்ளே கூட்டிச் சென்றான். இங்கிருந்து அவர்கள் முதலாவது வளாகப் பிரிவினுள் உள்ளிட்டனர்.

அரி மைல்கணக்காக நீண்டிருந்த முட்கம்பி வேலிகளைப் பார்த்தபடி நின்று வளாகத்திலும் பலஸ்தீனிய பால்மாக்கால், அகதிகளோடு வேலைசெய்வதற்காக உள்ளே கடத்தப்பட்டிருந்த, பதினெட்டு இருபது வயதான பெண்ணோ, இளைஞனோ அரியை வந்து பாசத்தோடு அரவணைத்துக் கொண்டு தாயகச் செய்திகளை வினவத் தொடங்கினர். ஒவ்வொரு முறையும், அங்கிருக்கும் முழுத் தொண்டர்களுக்குமான பால்மாக் கூட்டமொன்றை நடத்துவதாகக் கூறி அரி விலகிக் கொண்டான். ஒவ்வொரு வளாகத்திலும் பால்மாக் குழுத்தலை வர்கள் தங்கள் வளாகங்களைச் சுற்றிக் காட்டினர். இடைக்கிடை அரி தனது சந்தேகங்களை கேட்டுத் தெரிந்து கொண்டான்.

அதிகமான நேரம் அவன் அமைதியாக இருந்தான். மைல்கணக்கான நீண்ட முட்கம்பி வேலிகளை அவன் தொடர்ந்து ஆராய்ந்து கொண்டே போனான். எங்காவது 300 பேரை வெளியே கடத்திச் செல்ல உபாயம் கிடைக்குமா என்று, தேடி ஆராய்ந்து கொண்டே சென்றான்.

அதிகமான வளாகங்கள் ஒவ்வொரு தேசிய ரீதியில் ஒதுக்கப்பட்டிருந்தன. போலந்து நாட்டவர்க்கும், செக் நாட்டவர்க்கும், பிரெஞ்சு நாட்டவர்க்கும் மருத்துவ வசதியீனம் போன்ற பொதுவான எல்லா அநியாயங்க ளுக்காகவும் திட்டினான். அரி, டேவிட்டின் பிற இலாபங்களுக்குக் காது கொடுக்கவில்லை. மாறாக, வளாகங்களின் அமைப்பு முறைகளில் அதிக கவனம் செலுத்தினான். அவன் டேவிட்டை, தனக்கு அமைக்கப்பட்டிருந்த சுரங்கங்க ளைக் காட்டும்படி பணித்தான்.

குடாவுக்குச் சமீபமாகவிருந்த அடிப்படைவாத யூதர்களின் வளாகம் ஒன்றிற்கு அரி கூட்டிச் செல்லப்பட்டான். முள்வேலிக்குச் சமீபமாக ஒரு வரிசை மலசல கூடங்கள் இருந்தன. முதலாவது மலசலகூடத்திலிருந்த பெயர்ப் பலகை பெவின்கிராட் (Bevingrad) என்று கூறியது. 5வது 6வது மலசலகூடங்கள் போலியானவையாக இருந்ததோடு அவற்றின் குழிகளின் கீழிருந்து குடாவரை சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டிருப்பது அரிக்குக் காட்டப்பட்டது. இதை உன்னிப்பாகக் கவனித்த அரி, ஏமாற்றமாகத் தலையை ஆட்டியபடி, ஓரிருவருக்கு இது பொருந்தும் என்றும், தொகையான ஆட்கள் தப்பிச் செல்ல இது உதவாது என்றும் தீர்மானித்தார்.

கொண்டிருந்தான். ஏற்கனவே கார்த்திகை மாதமாகி விட்டாலும் புழுதிக் காற்றுடன் கூடிய, மூச்சுத் திணற வைக்கும் வெப்பநிலை நிலவியது. குடா அருகிலேயே கூடாரங்களால் நிறை ந்திருந்த வளாகங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அமைந்திருந்தன. கிளைகள் தாழ்ந்து படர்ந்திருந்த அக்காசியா (Acacia) மரங்களின் சூழலில் அமைந்திருந்தன. ஒவ்வொரு வளாகமும் பத்துப் பன்னிரெண்டு அடி உயரமான முட்கம்பி வேலிச் சுவர்களால் சூழப்பட்டிருந்தன. மூலைகளில் இயந்திர துப்பாக்கிகளை வைத்திருந்த பிரிட்டிஷ் வீரர்களைக் கொண்ட காவற் கோபுரங்கள் இருந்தன. எலும்பும் தோலுமான ஒரு நாய் அவர்களைப் பின்தொடரத் தொடங்கியது. பெவின் (Bevin) என்ற வார்த்தை அந்நாயின் ஒரு பக்கத்தில் எழுதியிருந்தது. அது அப்போதைய பிரிட்டன் வெளியுறவு மந்திரிக்கு செய்யப்பட்டிருந்த "கௌரவமாகும்."

வேறு வேறாக வளாகங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அடிப்படைவாத யூதர்களுக்கும், ஒரேவகையான அரசியல் கோட்பாடுகளைக் கொண்டிரு ந்தவர்களுக்கும் கூட வேறு வேறாக இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதிகள வான வளாகங்களில் இருந்தவர்கள், போரில் தப்பிப் பிழைத்து யூதர் என்பதைத் தவிர, எதுவித விசேட அடையாளங்களும் இல்லாமல், பலஸ்தீன த்துக்குப் போவதை மட்டும் நோக்கமாகக் கொண்டிருந்த மக்களாகும். ஆனால் எல்லோருமே ஒரே சீரான துன்பத்துக்கு ள்ளாகியிருந்தார்கள்.

முகாமின் இரு பிரதான பிரிவுகளை முட்கம்பி வேலிக்கு மேலாக இணைத்த மரப்பாலமொன்றினுக்கு அரியை டேவிட் அழைத்துச் சென்றான். பேர்கன் - பெவின் (Bergen Bevin) வரவேற்கிறது என்றொரு வரவேற்புப் பலகை பாலத்தின் மேல் காணப்பட்டது. "இந்தப் பாலம்

> தகவல் சேகரிப்பு ஆய்வுத் துறையில் எவருக்கும் சமமான திறமைகளைப் பலஸ்தீன யூதர்கள் கொண்டிருந்தார்கள் என்பது பிரிட்டிசாரே பலமுறை ஒத்துக்கொண்ட விடயமாகும். எந்தவொரு நாட்டில் இருக்கும் எந்தவொரு யூதனும் மொசாட் அலியா பெற் ஒற்றன் ஒருவனுக்குத் தகவல்களைச் சேகரிக்கும் மூலங்களாகப் பயன்படுத்தக் கூடியதாக இருந்ததோடு, அவர்களுக்குப் பாதுகாப்பளிப்பவர்களாகவும் இருந்தார்கள்.

விதியின் கசப்பான ஒரு விசித்திரமான விளையாட்டு அரி. போலந்தின் லொட்ஸ் (Lodz) யூத குடியிருப்பில் சரியாக இதே மாதிரியான பாலம் இருந்தது."

இவ்வேளையில் டேவிட் கோபத்தால் வெதும்பிக் கொண்டிருந்தான். சைப்பிர சிலிருந்த ஜேர்மன் போர்க்கைதிகளுக்கு இருக்கும் சுதந்திரத்திற்கும் வசதிகளு க்கும் உறைபோடக் காணாத நிலை மையில் அகதி முகாம்களில் காணப்பட்ட மனிதத் தன்மையற்ற நிலைமைக ளுக்காகப் பிரிட்டிஷாரைப் பேசிக்கொண்டி ருந்தான். உணவுத் தட்டுப்பாடு,

அவர்கள் சென்ற எல்லா வளாகங்களிலும் ஒரே கதைதான். அவை துர்ப்பாக்கியமான நிலையில் கோபமேறியிருந்த மக்கள் கூட்டத்தால், அவை ஒவ்வொன்றும் நிரம்பி வழிந்தன. கிட்டத்தட்ட எல்லோருமே கூடாரங்களின் உட்புறத் துணிகளைக் கிழித்து, சீரற்ற முறையில் தைக்கப்பட்ட ஊதா நிற குட்டை காற்சட்டைகளையும், மேற்சட்டை களையும் அணிந்திருந்தனர். அரி சந்தேகத்தாலும், வெறுப்பாலும், தோல்வியாலும் நிரம்பி வழிந்த முகங்களையே அங்கு கண்டான். அவன் சென்ற ஒவ்வொரு புதிய

பல மணித்தியாலங்கள் ஓடி மறைந்தன. கிட்டத்தட்ட சுற்றிப் பார்வையிடுவது முடிந்து விட்டது. இரு மணி த்தியாலங்களாக அரி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. பொறுமையிழந்த டேவிட், கடைசியில் கேட்டான்: "நீ என்ன நினைக்கிறாய் அரி?"

"இந்த இடங்களில் பெவினுக்கு அவ்வளவு செல்வாக்கில்லை என்று நினைக்கிறேன். வேறு என்ன பார்க்க இருக்கிறது?"

"நான் பிள்ளைகள் இருக்கும் வளாகத்தைக் கடைசியாய் பார்ப்பதற்காய் விட்டு வைத்திருந்தேன். அங்குதான் பால்மாக் தலைமைச் செயலகம் இயங்குகிறது. பிள்ளைகள் இருந்த இடத்துள் சென்றதும் மீண்டும் ஒரு பால்மாக் இளைஞன் அரியைக் கட்டியணைத்து வரவேற்றான். ஆனால் இம்முறை கட்டியணைப்புக்களை முகத்தில் புன்சிரிப்புடனும், உற்சாக த்துடனும் ஏற்றுக்கொண்டான். ஏனெனில்

**லியோன் யூரிஸ்**

இம்முறை கட்டியணைத்தவன் அவனுக்கு நெருக்கமான ஒரு பழைய நண்பனாகும். ஜோஆப் யார்க்கோனி (Joab Yarkoni) தான் அது. அவன் யார்க்கோனியைத் தூக்கி ஒருமுறை சுழற்றிவிட்டு கீழே விட்டுத் திரும்பவும் அணைத்துக்கொண்டான். ஜோஆப் யார்க்கோனி ஒரு கருமை நிறத்தோலைக் கொண்டிருந்த மொராக்கோ தேசத்தவன். அவன் இளம் வயதிலேயே பலஸ் தீனத்துக்குக் குடிபெயர்ந்திருந்தான். அவனுடைய கருமையான விழிகளில் உற்சாகம் ததும்பியதோடு அவனுடைய பெரிய மீசை முகத்தின் பாதியை அடைத்துக் கொண்டிருந்தது. ஜோஆப்பும், அரியும் பல சாகசச் செயல்க ளை ஒன்றாக மேற்கொண்டிருந்தார்கள்.

தொடர்ச்சி 12 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நெதர்லாந்தில்
# மாவீரர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி



வெற்றி பெற்ற - Ninterswijk பாரதி விளையாட்டுக் கழகம் - மாவீரர் குடும்பத்துடன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நெதர்லாந்துக் கிளையினரால் முதன் முதலாக மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இவ்வாண்டில் நடாத்தப்பட்டது. நெதர்லாந்தின் பல பிரதேசங்களிலிருந்தும் 10 விளையாட்டுக் கழகங்கள் இதில் பங்குபற்றின. முதல் சுற்றுப் போட்டிகள், 03-08-96 அன்று Den Helder, Sport Park இல் நடைபெற்றது. மாவீரர்களுக்கும் பொதுமக்களுக்குமான அமைதி வணக்கத்துடன், மங்கள விளக்கினை தமிழீழ விடுதலைப் புலிகளின் நெதர்லாந்துக் கிளைப் பிரதிநிதி ஏற்றி வைக்க போட்டிகள் ஆரம்பமாகின. போட்டிகள் 'லீக்' முறையில் நடாத்தப்பட்டு 4 விளையாட்டுக் கழகங்கள் இறுதிப் போட்டிகளுக்காகத் தெரிவாகின.

பாரதி கழகம், தமிழ் நட்சத்திரக் கழகம், தமிழ் கலாச்சாரக் கழகம், தாரகை கழகங்களே இறுதிப் போட்டிக்காகத் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் ஆகும்.

இறுதிப் போட்டிகள் 18-08-96 அன்று ஆரம்பமாகின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டிகளின் முதலாம் இடத்தை பாரதிக் கழகம் பெற்றது. இரண்டாம், மூன்றாம் இடத்தை முறையே தமிழ் நட்சத்திர கழகமும், தமிழ் கலாச்சாரக் கழகமும் பெற்றுக் கொண்டன.

இப்போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வெற்றிப் பதக்கங்களை வழங்கினர். சிறந்த பந்துக் காப்பாளராக தாரகை விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. கணேசலிங்கமும், சிறந்த விளையாட்டு வீரராக தமிழ் நட்சத்திர விளையாட்டுக் கழக செல்வன் இளமுருகனும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கான வெற்றிப் பதக்கங்களை தமிழர் விளையாட்டு ஒன்றியத்தின் உறுப்பினர் திரு. றொபேட் அளித்தார். நடுவர், துணை நடுவர்களும் புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நெதர்லாந்துக் கிளை நிதிப் பொறுப்பாளர் இங்கு சிறப்புரையாற்றினார். பல நூற்றுக்கணக்கான மக்கள் இதில் கலந்து கொண்டு விளையாட்டை சிறப்பித்தனர். வெற்றிக் கிண்ணங்கள் மாவீரர் எழுச்சி விழாவில் வழங்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டது. ✷

# சுதந்திர தாகம் எழுச்சி நிகழ்வு



நடுசிச் சூரியன் நசிவுண்டு போகும் ஒரு மாலைப் பொழுது அன்று. 03.08.96 சனி மாலை எழு மணிக்கு நோர்வேயில் ஒஸ்லோவில் நடைபெற்றது "சுதந்திர தாகம்" எனும் எழுச்சி நிகழ்வு. உரிய நேரத்திற்கு திரை விலகப்பட்டு நிகழ்ச்சித் தொகுபபாளர் மேடையில் தோன்றினார். அஞ்சலி நிகழ்வோடு ஆரம்பிக்கப்பட்ட அந் நிகழ்ச்சியில் தமிழீழத்தில் இதுவரை காலமும் உயிர்நீத்த மக்களுக்காகவும், மாவீரர்களுக்காகவும் இரண்டு நிமிட அமைதி வணக்கத்துடனும் சில விருத்தப் பாடல்களுடன் தொடங்கியது.

'சுதந்திர தாகம்' என்றாலே அதற்கென்றொரு தனிச்சிறப்பு, தாயக நினைவுகளை மீட்கும் ஒரு மகிமை வாய்ந்த நிகழ்ச்சியென்று சொல்லாம். 'சுதந்திர தாகம்' எனும் எழுச்சி நிகழ்வு ஒவ்வொரு ஆண்டும் நோர்வேயில் நிகழ்த்தப்படுகின்ற ஒரு நிகழ்வு. இந்நிகழ்வு பதினொரு ஆண்டாக நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டும் வழமைபோல் அதற்கேயுரிய தனித்தன்மையுடன் முதலாவது நிகழ்வாக மேடையேறியது. சின்னச் சிறுசுகளின் துடின நடனம் "நாளை இனிதாகும்" எனும் தங்களின் எதிர்கால நம்பிக்கை விதையேந்தி மிகவும் அழ்காக நடனமாடினார்கள் அந்த நடனத் தாரகைகள். இந்நடனம் மிகவும் அழகாக புதிய முறையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்நடனத்தை ஒழுங்கமைத்த நடன ஆசிரியை திருமதி கௌசலியா சுகுமார் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர். இந்நடனத்திற்கு "காலைப் பொழுதில் கீதம் இசைக்கும்" எனும் இனிய பாடல் இன்னும் மெருகூட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சிய மைப்புடன் இடம்பெற்ற திரு. வே. இராஜரத்தினம் அவர்களின் கிராமிய நடனங்களில் காவடியாட்டம், அனுமான் ஆட்டம் இம்முறை தவிர்க்கப்பட்டு புதிய ஆட்டங்கள் மேடையேறின. முதலாவதாக மயிலாட்டமும் அதனைத் தொடர்ந்து புலியாட்டம், ஒயிலாட்டம் இடம்பெற்றது.

கோயில் திருவிழாக்களிலும், தெருக்களிலும் கண்டுகளித்த இப்பாரம்பரிய நடனங்களை அதே தரத்துடன் கொண்டிருந்து தந்த அனைத்து நடனக் கலைஞர்களும் மிகவும் திறம்பட உள்வாங்கி ஆடியிருந்தனர்.

இருப்பினும், இக்கிராமிய நடனங்கள் கடந்தகாலத் தரத்தை விட்டு எனும் வளராமல் அவ்விடத்திலேயே தேங்கி நிற்பதுபோல் தெரிகிறது. இந்நடனக்கலை ஓர் உன்னதமான பாரம்பரிய கலை ஆகவே இது இன்னும் ஆழமாகத் தேடப்பட்டு அதனுடைய முழுப் பரிணாமத்துடன் வர வேண்டும். இது பல ரசிகர்களுடைய எதிர்பார்ப்பு என நினைக்கின்றேன். இந் நடனக் கலைக்கும் எம் மக்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பும், மதிப்பும் இருப்பது தென்படுகிறது. அன்றைய சுதந்திர தாக நிகழ்வில் இக்கிராமிய நடனங்கள் "ஊர்க்காற்று" எனும் பொருத்தமான பெயருடன் மேடையேற்றப்பட்டது. ஊருக்கு ஒரு கணம் ரசிகர்களை அழைத்துப்போய் வந்திருக்கும் என்பதும் உண்மையாக இருக்கலாம்.

சத்துருக்கொண்டான் கிராமத்தில் நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளின் அடிப்படையில் பின்னப்பட்டு மூன்றாவது நிகழ்ச்சியாக மேடையேற்றப்பட்டதுதான் "கொடியோரின் கொடுமை" நாட்டிய நாடகம். தமிழர்கள் இப்பூமியில் அனுபவிப்பதற்கு இனிமேலும் அவலங்களோ, கொடுமைகளோ, இழப்புகளோ இல்லையென்றாகிவிட்ட காலம் இது. அவ்வளவு அட்டூழியங்கள், சோகங்கள், வேதனைகள் எல்லாம் தாங்கித் தாங்கி, கதறி அழுது முறையிட்டுக் களைத்து புது வைராக்கியம் பிறந்து போராடும் காலமாகிவிட்டது இக்காலம். போராடினால் வாழ்வு, இல்லை அனைவர்க்கும் தாழ்வு எனும் யதார்த்த நிலை உருவாகிவிட்டது. இவ் உண்மைத் தத்துவத்தை வெளிநாட்டில் வாழும் ஒவ்வொரு தமிழ் மகனும் உணரும் வகையில், சத்துருக் கொண்டான் உண்மை நிகழ்வை கண்முண் கொண்டு வந்து தமிழ் மக்களின் உணர்வைத் தட்டி எழுப்பினார்கள். இதில் பங்குபற்றிய அனைத்துப் பெண் பிள்ளைகளும் பரதம் கற்றுக் கொண்டிருக்கும் பிள்ளைகளாகையால் அவர்களால் ஒவ்வொரு அபிநயமும் மிகவும் அழகாக வெளிக் கொணரப்பட்டது தெரிந்தது. இயல் இசை மாதிரி யாழ். வீரமணி ஐயரின் மூல எழுத்துருவிற்கு திருமதி கிருத்திகா கனகேந்திரன் அவர்கள் நெறியாள்கை நட்டுவாங்கம் செய்திருந்தார்.

இடைவேளையைத் தொடர்ந்து "விடியலின் கானம்" விடுதலைக் கீதங்கள் இசைக்கப்பட்டது. எதிரிகள் யாழ். மண்ணை ஆக்கிரமித்த பின் எம் மக்களின் மனம் சோர்ந்துவிடாது போக உருவாக்கப்பட்ட அந்த இனிய பாடல்கள் மக்கள் மனங்களைத் தட்டியெழுப்பிக் கொண்டே இருக்கும் என்பது உறுதி. மண்டபத்தில் அமர்ந்திருந்த மக்கள் அடிக்கடி கேட்டிருக்காத பாடல்களாக, இருந்து முழுமையாக இரசித்துக் கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. நோர்வேக் கலை பண்பாட்டுக் கழகத்தின் இசைக்குழுவிடம் நிறையத் திறமைகள் ஒழிந்துள்ளது. அவர்கள் அத் திறமைகளை முழுமையாக பாவிக்கத் தயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் சொந்த உருவாக்கத்தில் நிறைய இசைத் தட்டுக்களை நோர்வேத் தமிழ் மக்களும், ஏனைய நாடுகளில் வாழும் தமிழ் மக்களும் எதிர்பார்க்கின்றார்கள். அவர்களின் ஒரு படைப்பு மட்டும் காற்றோடு கலந்து இனித்தது. அது முதலாவது சுதந்திரதாகம் இசைத்தட்டு. இதனைத் தொடர்ந்து எதுவித இசைத்தட்டுக்களும் வெளிவரவில்லை. மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்!

சுதந்திர தாகத்தின் இறுதி நிகழ்வாக "நமக்கொரு நிலம்" நாடகம் அரங்கேறியது. இது ஒரு அரசியல் நாடகம். எங்கள் நாட்டில் விடுதலைப் புலிகள் எதற்காகப் போராடுகிறார்கள். சிங்களவர், தமிழர்களுக்கு இடையிலான உண்மைப் பிரச்சினைகள் என்ன? சிங்களவர் தமிழினத்தை ஏமாற்றி காலாகாலமாக காட்டி வந்த கண்கட்டு வித்தையை உடைத்தெறியும் வகையில் இந்நாடகத்தின் கரு பின்னப்பட்டு அலசப்பட்டிருந்தது.

இந்நாடகம் குறியீட்டு வடிவின் மூலம் விவாதிக்கப்பட்டிருந்தது. அந்தக் குறியீட்டு வடிவத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு யேர்மன் நாடக ஆசிரியரான Bertolf Brecht முன்வைத்த "தொலைப்படுத்தல்" (Alienation) உத்தி இந்நாடகத்தில் கையாளப்பட்டிருந்தது.

பெரிய காணி வீட்டுக்காரன், சிறிய காணி வீட்டுக் காரனை அடக்கி ஆள நினைப்பதையும், அந்தச் சிறிய காணி, தமக்குத்தான் சொந்தம் என்று சொல்லி மிரட்டி பறிக்க முற்படுவதையும் அதற்கு சிறிய காணி வீட்டுக்காரன் எதிர்வாதம் செய்து, சிறிய காணி எங்கள் மூதாதையர் ஆண்ட பண்டைகாலச் சொத்து அது எமக்கே உரித்தானது என குமுறி எழுந்து போராடும் விதமும் மிகவும் அழகாகச் சித்தரிக்கப்பட்டிருந்தது.

இங்கு "தொலைப்படுத்தல்" உத்தி மேடையில் நாடகப் பாத்திரங்கள் நிகழ்த்தும் நிகழ்வுகளோடு பார்வையாளர்கள் ஒன்றித்துப் போய்விடாது இடையிடையே தடுத்து அவர்களது சிந்தனையைத் தூண்டும் சில விடயங்களை விவாதிப்பதாக இருந்தது. ஆனால், இப் பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்துள்ளதா என்பது கேள்விக்குறியே? காரணம் இதில் எடுக்கப்பட்ட, அதாவது, நாடகத்தின் கரு அனைவருக்கும் இலகுவாக விளங்கக் கூடியதாக இருந்ததாக பல ரசிகர்களால் கூறக் கேள்விப்பட்டேன். இந்நாடகத்தின் கரு இன்னும் ஆழமாகப் போய்த் தொடப்பட்டிருக்கலாம்.

ஆகவே, இத் "தொலைப்படுத்தல்" உத்தி பரீட்சித்துப் பார்ப்பதற்கு இந்நாடக இயக்குநர் திரு. சர்வேந்திரா தர்மலிங்கம் அவர்களின் ஆளுமையில் இன்னும் பல நாடகங்கள் வரவேண்டும். இது என்னுடைய. பல ரசிகப் பெருமக்களுடைய எதிர்பார்ப்பும் கூட.

இந்நாடகத்துடன் அன்றைய சுதந்திரதாக நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைபெற்றன. இந்நிகழ்வினில் கிட்டத்தட்ட 800க்கும் அதிகமான தமிழ் மக்கள் கலந்து கொண்டு சுதந்திரதாக நிகழ்வினைச் சிறப்பித்திருந்தனர்.

– தொகுத்தவர்
மித்திலன்

● ● ● ● ● ● ● ● ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தியாகி திலீபனை எண்ணுவோம்! தீந்தமிழ் பாடல்கள் பண்ணுவோம்!

**புயலாகி நின்ற தீரம் துறவாகி சென்ற தியாகம்**

## தியாகி திலீபனின்

## ஒன்பதாவது நினைவு நாள்

**இடம்:** Henri-Dunant Str.65
Universitat-Alte-PH
4513 Essen

**காலம்:** 28.09.1996
**சனிக்கிழமை**
17:00 **மணிக்கு ஆரம்பம்**

**நிகழ்ச்சி நிரல்**

மௌனாஞ்சலி - தீபாஞ்சலி - உரையாஞ்சலி
அஞ்சலிக்கும் கலைப்பூக்கள்

**நடனாஞ்சலி**
நாடகம்:

**பங்களிப்பு**
நகையுரையாடல்:

**சிந்தனைவிழிப்பு**
தமிழிசை:

**விடுதலையை வழிபடுவோம்**

**திலீபனின் நினைவில் ஒன்று கூடுவோம்!**
**விடுதலைப் பாதையில் நடைபோடுவோம்!**

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம் யேர்மனிக் கிளை

## தியாகத் தீயில் 9ம் ஆண்டு...

## தியாகி திலீபனின்

## ஞாபகார்த்த எழுச்சி விழா

**நிகழ்ச்சி நிரல்**

- மௌனாஞ்சலி
- எழுச்சி நடனங்கள்
- நாடகம் (குந்த ஒரு குடிநிலம்)
- புரட்சி இசையமுதம்

**மரணத்தை வென்றவன்...**
**உனது பசி வலியது...**
**தாகம் வலியது...**

**இடம்:** Wijkuerenung "Peeler-Marke"
Scharmbarg 35, Assen
(Peelo Winkel centrum அருகில்)

**காலம்:** 29.09.1996
**ஞாயிற்றுக்கிழமை**
3.30 **மணிக்கு ஆரம்பம்**

**தமிழீழ விடுதலைப் புலிகளின் நெதர்லாந்துக் கிளை**

## தியாகி திலீபன் நினைவுக் கலைமாலை

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக அகிம்சா ரீதியாகப் போராடி தன்னுயிர் ஈந்த மாவீரன்
**லெப். கேணல் திலீபனின்**
9வது நினைவு தினம்.

**நிகழ்ச்சிகள்**

- **திலீப தாகம்** -அஞ்சலி நடனம்
- **சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் வாடல் கண்டும்...** -கவிதை அரங்கு
- **சிறப்புரையும் கலந்துரையாடலும்**
  -யாழ் குருமுதல்வர் அருட்தந்தை ஞ.து இம்மானுவல்
- **அந்நியக்காற்றில் அவிந்த தீபம்**
  -சங்கீத வித்துவான் கானமணி திலகேஸ்வரனின் இசை நிகழ்ச்சி
- **உயிராயுதம் 4** -கரும்புலிகள் பற்றிய விபரணம்

**"நான் மரணத்தை நேசிக்கிறேன் ஆனால் எங்கள் போராட்டம் மக்கள் போராட்டமாக மலரவேண்டும்"**
**-லெப். கேணல் திலீபன்**

**இடம்:** Grorud Samfunnshuset
Kalbakken

**காலம்:** 28.09.1996
**சனிக்கிழமை**
19:00 **மணிக்கு ஆரம்பம்**

**ஒழுங்குகள் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு**

# சந்திரிகாவின் சமாதானத்திற்கான...

அதைத்தான் "சமாதானத்திற்கான யுத்தம்" என்று கூறி விடுதலைப் புலிகள் மீதும் தமிழ் மக்கள் மீதும் இராணுவ அழுத்தங்களைப் பிரயோகித்துச் சிங்கள-பௌத்த பீடங்கள், எதைக் கடைசியில் கொடுக்கச் சொல்கின்றனவோ அதையே தமிழ் மக்கள் மீது திணித்துவிட முயல்கின்றனர். இவர்களது தீர்வுத் திட்டமானது, தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கும் தீர்வுத் திட்டமல்ல. அது தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்கையும் - கிழக்கையும் பிரித்து, தமிழ் இனத்தின் ஒருமைப்பாட்டைச் சீர்குலைத்து, தமிழர்களை இத்தீவிலிருந்து அழித்து விடுவதற்கான ஒரு தீர்வுப் பொறியாகவே அது கடைசியில் உருப்பெறும்.

பிறேமதாச அரசில் பிரதமராக இருந்து, பிரேமதாச அவர்கள் கொல்லப்பட்டதை அடுத்து - இரண்டாவது ஈழப்போர் நிறைவடையும் வரை - சனாதிபதியாக இருந்த டி.பி.விஜயதுங்கா அவர்கள், "இந்தத் தீவில் இனப் பிரச்சினையென்று ஒன்று இல்லை" என்றும் "இங்கு பயங்கரவாதப் பிரச்சினைதான் உண்டு" என்றும் பல தடவை கூறிவந்துள்ளதை தமிழ் மக்கள் மறந்துவிட முடியாது. அது மாத்திரம் அல்லாமல், "தெற்கில் இருந்து உணவுப் பொருட்கள் அனுப்பப்படாவிட்டால், வடபகுதி மக்கள் மண்ணையே உண்ணவேண்டி வரும்" என்றும் கூறியிருந்தார். அவரது கூற்றைச் சந்திரிகா வித்தியாசமான முறையில் நடைமுறைப்படுத்துகின்றார். அது எப்படியென்றால், இங்கு ஒரு இனப்பிரச்சினை உண்டு என்பது எதுவரையில் என்றால் அது தீர்க்கப்படும் வரையல்ல, தமிழினம் அழிக்கப்படும் வரை என்பதாகும். தமிழ் மக்கள் மண்ணையே உண்பார்கள் என்று விஜயதுங்கா சொன்னார் என்றால், சந்திரிகா தமிழர்களை பட்டினிச்சாவுக்குள் தள்ளிவிட்டு அதையே நடைமுறைப்படுத்திக் காட்டுகிறார்.

இப்படிப்பட்ட சந்திரிகா, தனது சிங்களப் படைகளை வாபஸ் வாங்கச்செய்து சமாதானம் ஏற்பட வழிசமைப்பார் என்று எதிர்பார்த்திருக்க முடியாது. அவர் "சமாதானத்திற்கான யுத்தம்" என்று கூறித் தமிழ் தேசியத்தை வலுவிழக்கச்செய்வதே, இன்றைய அவரது அரசின் நோக்கமாகும்.

சிங்கள ஆட்சியாளர்கள் ஒருபோதும் தமிழர்களின் உரிமைகளை தந்துவிடப் போவதில்லை. அவர்கள் தருவதற்காகத் தமிழ் மண்ணை ஆக்கிரமித்து தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிக்கவுமில்லை. அவர்கள் எப்படிப் பறித்தார்களோ அதேபோன்றுதான் தமிழ் மக்களும் தங்கள் உரிமைகளைப் போராடிப் பெறவேண்டிய வரலாற்று நிர்ப்பந்தந்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ✷

# டென்மார்க்கில் கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

**31-08-96** அன்று கரும்புலிகள் நினைவாக 7 நபர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி டென்மார்க் ஈகாஸ்ட் நகரில் நடைபெற்றது. மூன்றாவது முறையாக டென்மார்க்கில் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியில் டென்மார்க்கிலிருந்து 12 கழகங்களும், நோர்வேயிலிருந்து 4 கழகங்களும், சுவீடன், ஜேர்மனி ஆகிய நாடுகளிலிருந்து தலா ஒரு கழகமும் கலந்து கொண்டன.

டென்மார்க்கைச் சேர்ந்த ஸ்ரூவர் விளையாட்டுக் கழகமும் வீபோ விளையாட்டுக் கழகமும் இறுதியாட்டத்தில் கலந்து கொண்டன. இருப்பினும் முதலாம் இடத்தை ஸ்ரூவர் அணியே எடுத்துக் கொண்டது. இரண்டாம், மூன்றாம் இடத்தை முறையே வீபோ, கிரீன்ஸ்டட் யங்ஸ்டார் விளையாட்டுக் கழகங்கள் பெற்றுக் கொண்டன.

சிறந்த பந்துக் காப்பாளராக ஸ்ரூசர் கழகத்தைச் சேர்ந்த பந்துக் காப்பாளர் சுதாஸ் என்பவரும், சிறந்த விளையாட்டு வீரராக வீபோ கழகத்தைச் சேர்ந்த சிவாஸ்கரன் என்பவரும் தெரிவு செய்யப்பட்டனர். இச் சுற்றுப் போட்டியில் பல 'கோல்'களை போட்டதற்கான பரிசை கால் இறுதி ஆட்டம் வரை கலந்து கொண்ட நீபோ கழகத்தைச் சேர்ந்த குகன் என்பவர் பெற்றுக் கொண்டார்.



இறுதி ஆட்டத்தில் கலந்துகொண்ட ஸ்ரூவர் அணியும் வீபோ (பச்சை)அணியும்

வெற்றி பெற்றவர்களிற்கான வெற்றிக் கிண்ணங்கள், வெற்றிப் பதக்கங்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் டென்மார்க் பணியக கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. கி. செல்லத்துரை அவர்கள் வழங்கினார்.

பரிசளிப்பு வைபவத்தின் போது உரையாற்றிய திரு. கி. செல்லத்துரை அவர்கள், விளையாட்டு வீரர்கள் மிகவும் பண்பட்ட நிலையில் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டதானது, கரும்புலிகளிற்கு விளையாட்டு வீரர்கள் வழங்கிய மாபெரும் கௌரவமாக கருதுவதாகத் தெரிவித்தார்.

1994, 1995ஆம் ஆண்டிகளில் நடந்த இச்சுற்றுப் போட்டியில் இரண்டு ஆண்டுகளிலும் நோர்வே யுனைட்டட் முதலாவது இடத்தையும், லண்டன் புளூஸ் இரண்டாவது இடத்தையும் பெற்றிருந்தன. ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தியாகி திலீபனின் 9-வது நினைவு

## 15-9-96 — 26-9-96

## அவனி துடித்தது

அன்னம் தண்ணி ஏதுமின்றி
அண்ணன் இருந்தான்
அன்னை மண்ணில் காதல் கொண்டு
தன்னை மறந்தான்

ஊரமுது போதினிலும்
உண்ண மறந்தான்
ஊரெழுவில் பிறந்த மைந்தன்
உயிர் துறந்தான்


தேசத்தை மீட்டிடவே பசித்தீயில்
குதித்தான் — மாற்றான்
வேசத்தை கலைத்திடவே — ஒரு
வேள்வி தொடுத்தான்

மேகத்தை பிளந்து — ஒரு
மின்னல் பிறந்தது — மாற்றான் ஆதிக்க
மோகத்தை உடைத்து — ஒரு
பிள்ளை இறந்தது

பார்த்திருந்த வேளையிலே
பஞ்சாகினான் — அண்ணன்
பாரதத்தின் சதியினாலே
சருகாகினான்

அணுவணுவாய் அவன் சாக
அவனி துடித்தது
ஈழத்தாய் மடியில் அவன் சாய
எம் நெஞ்சு வெடித்தது

**ச. அதிரதன்**



T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-567-0463
Fax: 718-523-7299

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginneln - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 61142, F 435 61191

T.C.C
Vissingsbacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்